கோகுலம்


குழந்தைகள் பத்திரிகை

8-12-1974

50 காசு



யூகோபாங்கின் உதவிக் கரம்-



இப்பொழுது உங்கள் டெபாஸிட், 14% அதிகமாக பயனுடைய வடடியைப் பெற முடியும்

உங்கள் சேமிப்புகளை வளர்க்க விரும்பினால் யூகோபாங்க், எல்லா வாய்ப்புகளையும் வழங்குகிறது. இப்பொழுது உங்கள் ஃபிக்ஸட் டெபாஸிட் வட்டியை, ரெக்கரிங் டெபாஸிட் திட்டத்துடன் இணைப்பது மூலம் 14%க்கும் அதிகமான பயனுடைய வட்டியைப் பெற முடியும். அல்லது உங்களது டெபாஸிட்டை எங்களது கேஷ் டெபாஸிட் ஸர்டிஃபிகேட் திட்டத்தின் மூலம் 15 வருடங்கள் பூர்த்தி ஆன பிறகு நான்குமடங்குக்கு மேல் அதிகப்படுத்திக் கொள்ளலாம். வட்டி வருமானமோ 23%க்கு மேல்!


இவை தவிர, எங்களது துரிதமான - நேரடியான சேவைகளுடன் சேமிப்புகள், ஃபிக்ஸட் டெபாஸிட் மற்றும் ரெக்கரிங் டெபாஸிட் திட்டங்களும் எல்லா யூகோபாங்க் கிளைகளிலும் இயங்கிவருகிறது.

விவரங்களுக்கு அருகிலுள்ள யூகோபாங்க் கிளையுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யுனைடெட் கமர்ஷியல் பாங்க்

தாங்களே தங்களுக்கு உதவ மக்களுக்கு லாபகரமாக உதவுகிறது

UCOC-39 TAM



உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மை யென்று
தானறிதல் வேண்டும்
-- பாரதியார்

■

கோகுலம்

மலர் 3 ☐ இதழ் 18
டிசம்பர் 8, 1974
ஆனந்த, கார்த்திகை 23,

■

சந்தா விவரம்:

உள்நாடு:

ஒரு வருடம்	ரூ. 13-00
ஆறு மாதம்	ரூ. 6-50

வெளிநாடுகள்:

ஆண்டுச் சந்தா	ரூ. 25-00

மானேஜர்:
கோகுலம்
கல்கிப் பூங்கா,
சென்னை - 600031



அட்டையில்:

சுடர்த் தீபம் ஜொலிக்குது
இடர் இருளைப் போக்கிடும்

வண்ணப் படம்:
எஸ். அனந்த்



அண்ணாமலைக்கு அரோஹரா!

ரா. கணபதி

குழந்தைகளான நமக்குப் புத்தி வருவதற்காகத் தெய்வங்கள் பலவிதத்தில் விளையாடும் — குழந்தைகள்போல் விளையாடும். அவற்றில், குழந்தைகளான நாம் போட்டா போட்டியிட்டுச் சண்டையிடுவது போன்ற விளையாட்டும் உண்டு. 'என்ன, இப்படி மகா மகா ஸ்வாமி எல்லாரும் தங்களுக்குள் சண்டை போட்டுக் கொள்கிறார்களே' என்று முதலில் நமக்குத் தோன்றலாம். முடிவில் பார்த்தாலோ, அந்தச் சண்டையின் மூலமே நாம் நல்லறிவு பெறப் பாடம் புகட்டி விட்டார்கள் என்று தெரியும்.

இப்படித்தான் ஒரு சமயம் தேவர்கள் யாவரும் பூவுலகில் கூடியிருந்த போது பிரம்மாவுக்கும் விஷ்ணுவுக்கும் இடையே பெரிய போட்டா போட்டி ஏற்பட்டு விட்டது. ''நான்தான் பெரியவன்'' என்றார் பிரம்மா. ''நான்தான் பெரியவன்'' என்றார் விஷ்ணு.

தான் பெரியவன் என்று நிரூபிப்பதற்காகத் தனது பிரதாபங்களை எல்லாம் அடுக்கிக் கொண்டு போனார் பிரம்மா. ''நான்தான் சகல லோகங்களையும் படைக்கிறவனாக்கும். படைத்த உயிரினங்களுக்கெல்லாம் அறிவு தருகிற சரஸ்வதி என் மனைவிதானாக்கும்'' என்றார்.

அவருக்குச் சளைக்காமல் மகா விஷ்ணுவும் தமது பிரபாவங்களை முழக்கினார். ''அது சரி- ஆனால் எல்லாவற்றையும் படைக்கிற உன்னையே படைக்கிறவன் நானேயல்லவா? வெறும் அறிவை வைத்துக் கொண்டு உயிரினங்கள் வாழ்க்கை நடத்த முடியுமா? ஜீவனத்துக்கு இன்றியமையாத தனம், தானியம் எல்லாம் தருகிற மகாலக்ஷ்மி என் பத்தினியே அல்லவா?'' என்றார் விஷ்ணு.

முடிவேயில்லாமல் வாக்கு வாதம் நீண்டது.


அப்போது திடுமென அவர்களுக்கு எதிரே ஓர் ஒளி தோன்றியது-பேரொளிப் பிழம்பு தோன்றியது. வானத்துக்கும் பூமிக்குமாக ஒரு பெரிய நெருப்புத் தூண் போல் அது நின்றது. 'வானத்துக்கும் பூமிக்கும்' என்பதுகூடப் போதாது. ஏனெனில், அந்த ஒளித் தூணின் உச்சி நட்சத்திர மண்டலங்களுக்கும் அப்பால் முடிவே தெரியாதபடி எங்கோ போய்க் கொண்டேயிருந்தது. அவ்வாறே அதன் அடிப்பாகம் பூமியைக் குடைந்து கொண்டு, அப்பால் பாதாளத்தையும் துளைத்துக் கொண்டு, அதற்கும் அப்பால் எங்கோ சென்று கொண்டேயிருந்தது.

அதைப் பார்த்த மாத்திரத்திலேயே பிரம்மா, விஷ்ணு இருவருக்கும் இது ஏதோ ஒரு மகாப் பெரிய வஸ்து என்ற பிரமிப்பு உண்டாயிற்று. 'நானே பெரியவன்', 'நானே பெரியவன்' என்று உரிமை பாராட்டிய இருவருக்குமே அந்தப் பேரொளி தங்களைவிட நிச்சயமாகப் பெரிய வஸ்து என்கிற புத்தியும், அதிலிருந்து பிறக்கும் அடக்கமும் ஏற்பட்டன.

அந்த ஒளியைப் பார்த்ததும் இருவரும் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். அடி முடி தெரியாமல் நிற்கிற அந்த அக்கினி ஸ்தம்பத்தின் அடியை அவர்களில் ஒருவர் தேடிப் போக வேண்டும்- முடியை இன்னொருவர் தேடிப் போக வேண்டும். தங்கள் இலட்சியத்தை யார் முதலில் கண்டு பிடித்துத் திரும்புகிறாரோ அவரே இருவரில் பெரியவர் என்று வைத்துக் கொள்ள வேண்டும். இந்த ஏற்பாட்டை தேவர் அனைவரும் வரவேற்றனர்.

இப்படிப்பட்ட இரண்டு காரியங்களில் எதை எவர் செய்வது என்ற கேள்வி வந்த போது, சாக்ஷாத் மகா விஷ்ணு தாமாகவே, ''நான் அடியைத் தேடிப் போகிறேன்'' என்றார். அவர் எத்தனை அசட்டு வேஷம் போட்டாலும் முதலில் சமர்த்தாகி, பிறகு சமர்த்திலும் சமர்த்தாகி விடுவார். எனவே இப்போது மிகுந்த அடக்கத்துடன் நீத் தூணின் திருவடி தேட முன் வந்தார். வராக அவதாரம் எடுத்தவர் அன்றோ? எனவே எவ்வுருவும் தமக்கு இழிவானதல்ல என்ற உயர்ந்த மனத்துடன் பன்றி வடிவம் கொண்டு, பூமியை மூக்கு நுனியால் பிளந்து பிளந்து, கீழே கீழே செல்லத் தொடங்கினார்.

பிரம்மா மிகுந்த அகம்பாவத்தோடு ஹம்ஸ பட்சியின் வடிவம் கொண்டு வானில் எழும்பினார். அன்னம் தான் சரஸ்வதியின் வாகனம். எனவே



அந்த வடிவம் அவருக்கு எளிதில் கைவந்தது.

பேரொளிப் பிழம்பின் அடி தேடித் திருமால் கீழே கீழே, அதலம், விதலம், சுதலம், ரசாதலம், தலாதலம், மகா தலம் பாதாளம் என்று கீழ் ஏழுலகும் கடந்து போய்க் கொண்டேயிருக்கிறார். அலுக்காமல், சளைக்காமல் போகிறார். ஆனால் இன்னமும் அந்த நெருப்புத் தூண் எங்கேயிருந்து புறப்படுகிறது என்று தெரியவில்லை — தெரியவேயில்லை! திருமாலுக்கு மேலும் மேலும் அடக்கம் உண்டாயிற்று. ''இது என் சக்திக்கு அப்பாற்பட்ட விஷயம். இதை நானாகக் கண்டு கொள்ள முடியும் என்று எண்ணி இன்னமும் பிரயாசைப் படுவது திமிர்தான், முட்டாள்தனம் தான். இந்தப் பேரொளியே என்னிடம் கருணை கொண்டு தன் அடியைக் காட்டினால்தான் உண்டு. ஆகவே இப்போது நான் செய்யக்கூடியதெல்லாம் என் இயலாமையை ஒளிவு மறைவில்லாமல் ஒப்புக் கொள்வதுதான். நான் சக்தியில் பெரியவனாக இல்லாததால் ஒன்றும் குறைவில்லை. சத்திய சந்தனாகச் சிறியவனாகவே இருந்தாலே போதும்'' என்று சமர்த்திலும் சமர்த்தாக, படு சமர்த்தாக முடிவு செய்துவிட்டார் மகா விஷ்ணு. 'மகா' என்றாலே பெருமை வாய்ந்தவர் என்று அர்த்தம். அவர் 'எனக்குப் பெருமையே இல்லை' என்று ஒப்புக் கொள்ள முன்வந்தது எத்தனை பெருமை பார்!

அருணாசலேஸ்வரர் கோயிலும், திருவண்ணாமலையும்



பிரம்மா ஒரே அகம்பாவத்தோடு, மேகங்களையும், கிரகங்களையும், நட்சத்திரங்களையும், ஆகாய கங்கையையும் கடந்து போய்க் கொண்டேயிருந்தார். பூலோக எல்லை கடந்து புவர் லோகம், ஸுவர்லோகம், மஹர் லோகம், ஜன லோகம், தபர் லோகம் இவற்றைக் கடந்து தமது பிரம்ம லோகத்தையும் தாண்டிவிட்டார்.

அன்னத்தின் இறகுகள் வலிக்கத் தொடங்கின. அநாயாசம் போய், மிகுந்த பிரயாசையுடன் உயரே, உயரே பறந்து பார்த்தது. இறகுகள் இற்று விழும் போலாயிற்று. தீத் தூணின் முடியோ தெரிகிறபாடாகவேயில்லை. பிரம்மா தவித்தார். அவருக்கு இப்போதும் துளிக்கூட அடக்கம் வந்தபாடாக இல்லை.

மேலே அண்ணாந்து பார்த்தார் — முடி தெரிகிறதா என்று. 'முடியில் என்னென்ன இருக்கிறன என்று இங்கிருந்தே தெரிந்து விட்டால் போதும், அருகே போக வேண்டாம். இறகு தாங்க முடியாமல் வலிக்கிறது. பூமிக்குத் திரும்பிப் போய், முடியில் காணும் வஸ்துக்களையெல்லாம் கூறி, அதைப் பிடித்துவிட்டேன் என்று பொய் சொல்லி விட்டால் போச்சு' என்று தீர்மானித்துக் கொண்டார். திருமாலுக்கும் இவருக்கும் எத்தனை வித்தியாசம், பாருங்கள்! அகந்தையிருக்கும் இடத்தில் அசத்தியம்தான் இருக்கும். இதை நமக்கு உணர்த்தவே சமர்த்துப் பிரம்மா இத்தனை அசடாக வேஷம் போடுகிறார்.

இத்தனை விளையாட்டும் அந்த அக்னித் தூணுக்கு வேண்டியிருந்தது. இன்னமும் விளையாட வேண்டும் என்றே அது தன் முடியை லேசாக ஒரு முறை அசைத்தது. உடனே அதன் முடியில் வைத்திருந்த ஒரு தாழம்பூ கீழே விழுந்தது.

''ஏ, தாழம்பூவே! என்றாலும் செல்ல வொண்ணாத உச்சஸ்தானத்திலிருந்து நீ வருகிறாயே, அது எந்த இடம்?'' என்று வினவினார்.

''அக்னித் தூணாக நிற்கும் பரமசிவனின் முடியிலிருந்தாக்கும் நான் வருகிறேன்'' என்றது தாழம்பூ. அதற்குக் கீழே விழுந்தாலும் அகம்பாவம் போகவில்லை.

''ஓஹோ! பரமேசுவரர்தாம் இப்படி நெருப்புத் தூணாக நிற்கிறாரா? நல்லது. நீ எனக்கு ஓர் உபகாரம் செய்வாயா? செய்தால், ஸ்ருஷ்டி கர்த்தனான நான் உன்னைவிட வாசனையான பூ எதையுமே படைக்காமல், உன்னையே

நறுமண அரசனாக இருக்கிற உயர் பதவியில் வைத்திருப்பேன்'' என்றார்.

ஆசை யாரை விட்டது? தாழம் பூ அவர் எத்தகைய உதவி கேட்பார் என்பதையே யோசிக்காமல், ''நீங்கள்; என்ன கேட்டாலும் செய்கிறேன்''என்று கூறிவிட்டது.

''அப்படியானால் இந்த ஜோதி முடி எப்படி இருக்கும்? அங்கே என்னென்ன வஸ்துக்கள் இருக்கும் என்பதை யெல்லாம் சொல். பிறகு என்னுடனேயே பூலோகத்துக்கு வா. அங்கே தேவர்களும் விஷ்ணுவும் இருப்பார்கள். நான் ஜோதி முடியைக் கண்டதாக அவர்களிடம் கூறுவேன். நீ சொல்கிற அடையாளங்களை நானே கண்டு கொண்டதாகச் சொல்வேன். 'ஒளி முடியைப் பிடித்து, அதிலிருந்தே இந்தத் தாழம் பூவைப் பறித்து வந்தேன். இதுவே எனக்குச் சாட்சி' என்பேன். நீயும் 'ஆமாம், ஆமாம்' என்று ஒத்துப் பாடவேண்டும்'' என்றார்.

'நறுமண அரசன்' என்ற விருதுக்கு ஆசைப்பட்ட தாழம்பூ உடனே பொய்ச் சாட்சி சொல்லக் கொஞ்சமும் கூசாமல் ''அப்படியே செய்கிறேன'' என்று கூறி விட்டது.

பிரம்மா தாழம்பூவோடு கூட பூமிக்குத் திரும்பினார். அங்கு தேவர்கள் கூடியிருந்த இடத்துக்கு மகாவிஷ்ணு முன்னரே திரும்பி விட்டிருந்தார். தன்னால் அடி காண முடியவில்லை என்று அவர்களிடம் மனம் விட்டுக் கூறியிருந்தார் அவர்.

பிரம்மா கீழிறங்கு முன்பே, ''கண்டேன் முடியை'' என்று சத்தமிட்டுக் கொண்டு வந்தார். ''ஆமாம், ஆமாம். கண்டார் முடியை. நானே சாட்சி'' என்று தாழம்பூ பக்க வாத்தியம் வாசித்தது.

ஆனால் பிரம்மன் பூமியில் இறங்கியவுடன் பேரதிசயம் நிகழ்ந்தது.

வானையும் கடந்து, பாதாளமும் குடைந்து சென்ற பேரொளி மறைந்தே விட்டது. அது ஜொலித்த இடத்தில் ரிஷப வாகனத்தின் மீது, உமையன்னையோடு கூடப் பரமேசுவரர் திவ்விய தரிசனம் தந்தருளினார்.

அவரது கருணைப் பார்வை முதலில் திருமாலின் மீதுதான் விழுந்தது. அமுதென அன்பொழுகப் பேசினார். ''நாராயணரே! தாங்களும் நானும் ஒன்றேதான் ஆயினும் ஒரு விளையாட்டு நிமித்தம் தாங்களே தழைந்து சென்று என் தாளினைத் தேடிச் சென்றீர்கள். தோல்வியையும் வெற்றி போலவே அமைதியுடன் ஏற்று, அடக்கத்தோடு, சத்தியத்தோடு அதை உலகறிய வெளியிட்டீர்கள். இதனால் இனி என் பக்தர்கள் யாவரும் என்னோடு தங்களையும் வைத்து வழிபட வேண்டும் என்று ஆக்ஞை இடுகிறேன். ஒரு நிலையில் தாங்களே என் வாகனமான தர்ம வடிவான ரிஷபமாவீர்கள். அதற்கு மேல் நிலையில் என்னிடமிருந்து சக்கராயுதம் பெற்று அதன் பலத்தால் சகல உலகையும் காக்கும் வல்லமையுடன் விளங்குவீர்கள். அதற்கும் உயர்ந்த நிலையில் இதோ என் இடப்புறம் திகழும் என் சக்தியான உமையாகவே இருப்பீர்கள். முடிந்த முடிவிலோ நானேயாக இருப்பீர்கள். சத்தியத்துக்கும், அடக்கத்துக்கும் நான் தரும் வெகுமானமே இவை யாவும்'' என்றார்.



அண்ணாமலையின் உச்சியில் எரியும் அகண்ட விளக்கு இதுதான். - புகைப்படங்கள்: துரலிங்கம்.

பிறகு பிரம்மனைக் கண்டிப்புடன் நோக்கித் தண்டிக்கும் குரலில் ''அடக்கமில்லாதார், சத்தியமில்லாதார் யாராயினும் அவர்கள் அதற்கான தண்டனையைப் பெற்றேயாக வேண்டும் என உன் மூலம் உலகத்துக்கு அறிவிப்பேன். அடக்கமின்றிப் பொய்யுரைத்த நீ இனி எந்தக் கோயிலிலும் வழிபாடு பெற மாட்டாய். பன்றி கருப்பாகவும், விகாரமாகவும் இருக்கலாம். ஆனால் நான் உவக்கும் அழகு குண நலன்கள்தான். எனவேதான் விஷ்ணுவுக்கு என்னோடு கூட பூஜை பெறும் பதவி தந்தேன். திருக்கோயில்களில் சந்நிதி கொள்ளும் பதவியிலிருந்து உன்னை நீக்கினேன். உன் கதியே இதுவென்றால், நீ பதவி தருவதாக இருந்த தாழம்பூவைப் பற்றி என்ன சொல்ல? என் முடியிலிருந்து விழுந்ததோடு குணத்திலும் விழுந்த அதற்கு நறுமண அரசு என்ற விருது ஒருநாளும் கிடையாது. அது பார்

வைக்கு நேர்த்தியாக, வெண்மையாக இருந்தாலும், பதவி மோகம் கொண்டு பொய்ச் சாட்சி சொன்னதால், இன்றிலிருந்து அது என் அர்ச்சனைக்கு உதவாது என்று ஒதுக்கினேன். அகங்காரம் கொண்ட தாழம்பூ என் அலங்காரத்துக்கு ஆகாது எனத் தள்ளினேன். மாறாக, வெட்டிவேருக்கு உருவ அழகு இல்லாதிருக்கலாம். அது கரியதாக இருக்கலாம். ஆனால் தன்னைக் காட்டிக் கொள்ளாமல் என் சடையோடு சடையாக ஒளிந்திருக்கும் அடக்கம் வெட்டிவேருக்கே உள்ளது. எனவே அதற்குப் புது மணம் ஊட்டி, அதையே நறுமண அரசாக்கி, என் விசேஷ அணியாகக் கொள்ள உவந்தேன்'' எனக் கூறிய சிவபெருமான் தேவர் கூட்டத்தின் மீது தம் அருள் பார்வையை வீசினார், பேசினார்:

''தேவர்களே! செருக்கும் அசத்தியமும் உச்சத்துக்குக் கொண்டு போவதாகத் தோன்றினாலும் பாதாளத்தில் வீழ்த்துபவையே ஆகும். பணிவும், சத்தியமும் தாழ்வாகத் தோன்றினாலும் அவையே உயர்நிலை தருபவை. இந்த உண்மைகளை உள்ளத்தில் ஆழப் பதிவிப்பதற்கே மும்மூர்த்தியான நாங்கள் இந்த லீலையைப் புரிந்தோம். செருக்கால் தாழம்பூ தாழ்ந்தது. தாழ்ந்த வராகமோ எனக்கிணையாக உயர்ந்தது. தாழ்ந்திருங்கள், தாழ்ந்து வாழுவீர்'' இவ்வாறு கூறித் தேவர்களைத் தத்தம் இடத்துக்கு அனுப்பி வைத்தார் பரமர்.

அதன் பின் அண்ணல் என்ன செய்தார்? அண்ணாமலையாகக் குளிர்ந்தார். அடிமுடியற்ற அக்னி ஸ்தம்பமே இன்றும் நாம் கண் குளிரக் கண்டும், வணங்கியும், கிரிப் பிரதட்சிணம் செய்தும் உய்யுமாறு திருவண்ணாமலையாக, அருணாசலமாக விளங்குகிறது.

செல்வ பலத்தாலோ அறிவு பலத்தாலோ பகவானை அடைய முடியாது. லக்ஷ்மியின் பதியான திருமால் செல்வ பலத்தைக் குறிக்கிறார். சரஸ்வதியின் நாயகரான பிரம்மன் அறிவு பலத்தைக் குறிப்பவர். அவர்களாலும் ஆண்டவனின் அடிமுடி காண முடியவில்லை. அன்பினால், எளிமையால், சத்தியத்தாலேயே ஸ்வாமியைப் பெற முடியும். இந்த உண்மையை மலைமேல் ஏற்றிய விளக்குப் போல் விளக்கவே மேற்சொன்ன விளையாட்டை ஸ்வாமி விளையாடினார். இதை இன்றைக்கும் நமக்கு வருஷம் தோறும் நினைவூட்டுவதற்காகத் திருவண்ணாமலை உச்சியில், ஒரு கிணற்றளவு அகலில், குளத்தளவு எண்ணெய் விட்டு, மலைப்பாம்பளவு திரியிட்டு தீபமேற்றும் திருவிழா நடத்துகிறார்கள். இவ்விழாவைத்தான் திருக்கார்த்திகை என்று கொண்டாடுகிறோம். எங்கே, இன்று அண்ணாமலையில் அடியார்கள் எழுப்பும் ஆனந்த கோஷத்தை நீங்களும் உங்கள் இனிய தொண்டையால் பக்தியுடன் எழுப்பிக் களியுங்கள்:

''அண்ணாமலைக்கு அரோ ஹரா !''

ஓ, அப்படியா!



பட்டு: மின்மினிப் பூச்சியே என்ன தேடிக் கொண்டிருக்கிறாய்?

மின்மினி: நான் தேடிக் கொண்டிருப்பதைப் பற்றிச் சொல்கிறேன். முதலில் நீ என்னைக் கூப்பிட்டாயே, மின்மினிப் பூச்சி என்று, அது தவறு. நான் பூச்சியல்ல. மேல் நாட்டினர் கூட என்னைத் 'தவறாக லைட்னிங் பக்' 'மின்னல் பூச்சி' என்கிறார்கள். அறியாதவர்களின் வார்த்தை இது. நானோ வண்டு இனத்தைச் சேர்ந்தவள்.

பட்டு: அப்படியா? அத்துடன் நீ என்னைப் போலப் பெண் என்றும் புரிந்து கொண்டேன். அதுசரி இப்படி டார்ச் விளக்குப் போட்டுக் கொண்டு எதைத் தேடுகிறாய்?

மின்மினி: சொன்னால் சிரிக்க மாட்டாயே? என்னை மணக்கப் போகும் கணவனைக் கண்டு பிடிப்பதற்குத் தான் இப்படி மினுக்கிடுகிறேன். நான் வெளி விடும் ஒளியைக் கண்டு என் கரம் பற்றப் போகிறவர் என் இருக்குமிடம் அறிந்து என் அருகே வருவார். மினுக்கிடும் இந்த அவயவம் என் உடலின் ஒரு பகுதி. என் வயிற்றில் தான் இந்த ஒளிக்கான சக்தி உற்பத்தி யாகிறது. என்னென்னவோ ஆராய்ச்சிகள் செய்து எதை எதையெல்லாமோ கண்டுள்ள உங்களால் கூட நாங்கள் வெளி விடும் இந்த ஒளிக்கான காரணத்தை அறிய முடியவில்லை. ஏதோ ரசாயன மாற்றம் என்கிறார்கள். நாங்கள் வெளிவிடும் ஒளிக்கு உஷ்ணம் கிடையாது. இப்படி ஒரு ஒளியை எப்படி உண்டாக்குகிறது என்பதை உங்களால் இன்னும் அறிய முடியவில்லை. எங்களிடமிருந்து வெளிப்படும் இந்த விசித்திர ஒளி தொடர்ந்து வருவதில்லை, அது தெரியுமா உனக்கு? நாங்கள் விரும்பும் போது தான் சிக்னல் கொடுப்பது போல விட்டு விட்டு இதை ஒளிரச் செய்வோம். எங்கள் கணவன் மாரைக் கவர்ந்திழுக்க ....

பட்டு: ஓ! அப்படியா? உனக்கு நல்ல கணவனாகக் கிடைக்கட்டும், போய்வா!

பிராணிகள்

1. நாய் ஆகாரம் இல்லாவிட்டால் கூட இறக்காது. ஆனால் தூக்கம் இல்லாவிட்டால் இறந்துவிடும்.

2. ஈ தன் இறக்கையை நிமிஷத்துக்கு இருபதாயிரம் தடவை அடித்துப் பறக்கிறது.

3. முதலை கண்களைத் திறந்து வைத்துக் கொண்டுதான் தூங்கும்.

4. மீன் இறக்கும் வரை வளர்ச்சி அடைந்துகொண்டே இருக்கும்.

5. மலைப் பாம்பு சேர்ந்தாற்போல் நூறு முட்டைகள்கூட இடும்.

6. உருவ அளவுக்கு மேலே அதிக அளவு மூளை உள்ள பிராணி எறும்பு.

7. வெட்டுக்கிளியின் ரத்தம் சிவப்பாக இராது - வெள்ளையாக இருக்கும்.

8. கால்களையும் தலையையும் கீழ்நோக்கி வைத்துக் கொண்டு தான் கழுகு பறக்கும்.

9. கங்காருவின் வால் தரையில் பட்டுக் கொண்டிருந்தால்தான் அதனால் தாவிக் குதிக்க முடியும்.

10. முட்டையிலிருந்து வெளி வந்த முதலைக் குஞ்சு முட்டையை விட மூன்று பங்கு பெரிதாக இருக்கும்.

11. நண்டுக்குப் பற்கள் வயிற்றில் இருக்கின்றன.

12. தன் உடலைவிட அதிக நீளமான வால் உடையது குரங்கு !

13. உணவு கிடைக்காத பொழுது தேள்கள் ஒன்றை மற்றொன்று கொன்று விடும்.

14. தான் உண்ணும் உணவுப் பொருட்களைத் தண்ணீரில் கழுவி விட்டுத்தான் சாப்பிடும் ராகூன் என்னும் மிருகம்.

15. ஏற்கனவே இறந்த மிருகத்தைப் புலி சாப்பிடாது. தான் அடித்துக் கொன்றதைத்தான் சாப்பிடும்.

16. குதிரை எழுந்திருக்கும்பொழுது முதலில் முன் கால்களை உயர்த்தி எழுந்திருக்கும். மாடு முதலில் பின் கால்களை உயர்த்தி எழுந்திருக்கும்.

17. காற்று வீசும் திசைக்கு எதிர்த் திசையிலேயே நாய் தன் மூக்கு இருக்கும்படியாகப் படுக்கும். மோப்ப சக்தியால் எதிரி வருவதை அப்பொழுதுதான் அதனால் சுலபமாக உணரமுடியும்.

18. சிம்பான்ஸி என்ற மனிதக் குரங்குக்கு ஜலதோஷம் பிடிக்கும்.

19. ஒட்டைச் சிவிங்கி ஒன்றுக்குத்தான் கழுத்தைத் திருப்பாமலே பின்புறம் பார்க்கும் சக்தியுண்டு.

20. மண்ணுண்ணி என்ற மண் புழுவுக்குக் கண்கள் கிடையாது.

21. நீல நிறம் ஈக்குப் பிடிக்காது.

22. நான்கு கால் பிராணிகளில் ஒட்டகத்துக்கு மட்டும் நீந்தத் தெரியாது.

23. ஒட்டகச் சிவிங்கியின் முன் கால்கள் மற்ற கால்களைவிட உயரமாகத் தெரிகிறதல்லவா ? உண்மையில் அதன் எல்லாக் கால்களும் சம நீளமுடையவையே !

24. வாத்துகள் தூங்கிக் கொண்டே நீந்தும்.

25. வண்ணத்துப் பூச்சிகள் தங்கள் கால்களினாலேயே ருசியை அறிகின்றன.

26. கரப்பான் பூச்சி எப்போதும் கணக்காக பதினாறே பதினாறு முட்டைகள்தான் இடும்.

27. நான்கு முழங்கால்கள் உள்ள மிருகம் யானை ஒன்றுதான்.

28. வரிக் குதிரையின் மேல் உள்ள கோடுகள் வெண்மை நிற மானவை. நாம் எண்ணிக் கொண்டிருப்பது போல் கறுப்பல்ல !

29. நீரை உறிஞ்சிக் குடிக்கிற பறவை புறா ஒன்றுதான். மற்ற பறவைகள் தலையைத் தூக்கி மேலே பார்த்துதான் தண்ணீரை விழுங்கும்.

தொகுப்பு: கே. வேங்கடராமன்

மூக்குக் கண்ணாடி

ராஜாஜி



சுப்பராய சாஸ்திரியார் தம் மூக்குக் கண்ணாடியை எங்கேயோ வைத்துவிட்டு மறந்து போனார்.

''மூக்கே! என் பிரியமான மூக்கே! எப்போதும் உன் பேரில் சவாரி செய்து வந்த கண்ணாடி எங்கே?'' என்றார்.

மூக்கும் பேச ஆரம்பித்தது. ''ஏ, கண்களே! என் னருமைச் சகோதரிகளே! மூக்குக் கண்ணாடியைத் தேடித் தாருங்களேன். நம் எஜமானர் படிக்க முடியாமல் வருந்துகிறார்'' என்று மூக்கு கண்களுக்குச் சொல்லிற்று.

கண்கள் மூக்கின் விண்ணப்பத்தைப் பொருட்படுத்தவில்லை.


''ரொம்ப சரி! சவாரி உன் மேல்! பேரும் உன் பெயர்! எங்களுக்கு என்ன கவலை?'' என்றது வலது கண்.

''ஏய், மூக்கே! நீதான் 'மூக்குக் கண்ணாடி!' 'மூக்குக் கண்ணாடி!' என்று சொந்தம் பாராட்டி வந்தாயே! நீயே தேடு!'' என்றது இடது கண்.

''சரி, அப்படியே!'' என்று ஒப்புக் கொண்டு மூக்கானது வீட்டில் எல்லா இடமும் மோந்து மோந்து தேடிப் பார்த்தது. கிடைக்கவில்லை. மூக்குக் கண்ணாடிக்கு ஏதேனும் தனி நாற்றம் இருந்தால் அல்லவா மூக்குக்குத் தெரியும்?

துயரத்துடன், ''எனக்குச் சிக்கவில்லை. உம் கண்களைக் கேட்டுப் பாருங்கள்'' என்றது மூக்கு, சுப்பராய சாஸ்திரிக்கு.

அவர் தம் கண்களைப் பார்த்து, ''கண்களே! உங்களுக்காகத்தான் நான் இந்தக் கண்ணாடியை வாங்கிப் போட்டுக் கொண்டேன். கொஞ்சம் தேடிப் பாருங்கள். எங்கேயோ வைத்துவிட்டு மறந்து போனேன்!'' என்று வேண்டிக் கொண்டார். கண்கள் இந்தக் காரியத்தில் கவனம் செலுத்தாமல் மந்தமாக இருந்தன.



அப்போது காது சொல்லிற்று: ''கண்களே! இப்படி ஒருவர் மேல் ஒருவர் நாம் போட்டியும் பொறாமையும் அசூயையும் வைத்துக் கொண்டோமானால் எல்லாருக்கும் கஷ்டமாகும். பெரியோர் சொல்லக் கேட்ட சாஸ்திரம் உங்களுக்குச் சொல்லுகிறேன். கேளுங்கள்'' என்று வாயைத் தூண்டிற்று வலது காது. இடது காதும் கூடச் சேர்ந்து கொண்டது. வாயானது பேச ஆரம்பித்தது. அதாவது சாஸ்திரியார் பாட ஆரம்பித்தார்:


பார்ப்பான் அகத்திலே பால்பசு ஐந்துண்டு
மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன
மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினால்
பார்ப்பான் பசு ஐந்தும் பாலாய்ச் சொரியுமே

ஐந்து 'பசு'க்கள் என்றால் தெரியுமா? சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் இவற்றுக்குரிய ஐந்து பொறிகள். இந்த ஐந்து 'பசு'க்களும் வெறி கொண்டு தம் பாட்டுக்குச் செல்லாமல், எஜமானனால் சரியாக ஆளப்பட்டு நின்றால், அதாவது அவன் அவற்றைச் சரியாக அடக்கி ஆண்டால், அதாவது அவன் அந்தப் பசுக்களைச் சரியாக மேய்த்தானானால் அந்த ஐந்து பசுக்களும் நல்ல பால் சொரிந்து கறக்கும். இது திருமூலருடைய பாட்டு.

எவ்வளவு சாஸ்திரம் படித்து வித்துவானாக இருந்தாலும் ஐம்புலன்களை ஆளாமல் ஒருவனுக்கு ஆனந்தம் கிடையாது.

''நாம் ஒற்றுமையாக வேலை செய்ய வேண்டும். ஒன்றின் பேரில் பொறாமையோ அசூயையோ படலாகாது'' என்று வாயானது சொல்லிற்று. கண்களுக்குப் புத்தி வந்தது. தேடிப் பார்த்தன. மூக்குக் கண்ணாடி கிடைத்து விட்டது.





பக்கத்திலிருக்கும் பொருளைத்தான் மூக்கு மோந்து கண்டு கொள்ளும். கண்களோ அளவுக்கு அடங்காத வெகு தூரத்தில் உள்ள நட்சத்திரங்களையும் பார்க்கும். இது கண்களின் அற்புத சக்தி. மூக்கின் பெருமையோ, கொஞ்ச நேரம் இருந்து மறைந்த பொருளின் வாசனையைக்கூடக் கண்டு கொள்ளும். மறைந்து போன பொருளைக் கண்கள் காணாது. ஆனால் மூக்கு கண்டு கொள்ளும்.

அக்காள் தலையில் ஒரு நாள் சூட்டியிருந்தது மல்லிகைப் பூ. மூன்றாவது நாளிலும்கூடத் தம்பி மோந்து பார்த்து வாசனையைக் கண்டு கொள்ள முடியும்.

முந்திய நாளிலிருந்த பூவை இன்று கண்களால் பார்க்க முடியாது. நேற்றிரவு திருடன் நடந்த வழியை, நாய் மோந்து மோந்து கண்டு கொள்ளும். அப்படியே முந்திய இரவு எலி ஓடின வழியைப் பூனை அறிந்து கொண்டு வேட்டையாடும். கண்களால் காண முடியாததை மூக்கு கண்டு கொள்ளும்.

மூக்கும் கண்ணும் காணாத பாட்டைக் காது கேட்டு உள்ளத்துக்கு இன்பம் தரும்.

உடலின் கதை வெகு விசித்திரம். கண்டும், கேட்டும், நுகர்ந்தும், தொட்டும் அனுபவித்த பொருளின் நினைவு முப்பது ஆண்டுகள் கழிந்து போனாலும் வேண்டும் போது பழைய கணக்குப் புஸ்தகத்தில் வாங்கியதும் கொடுத்ததும் பதிவு ஆகியிருப்பதை எடுத்துப் பார்ப்பது போல் வேண்டிய போது நினைவுக்கு வரவழைத்துக் கொள்ளலாம். ஐந்து பொருள்களின் சக்தியை விட நினைவு என்கிற சக்தியானது வெகு அற்புதம். எவ்வளவு காலமாயினும் இன்று காண்பது போல் மனத்தின் முன் கொண்டு வந்து நிறுத்தும். அறுபது ஆண்டுகளுக்கு முன் கேட்ட என் தகப்பனாரின் குரல், தாயின் குரல் நினைவுக்கு வந்து இப்போது காதில் கேட்பதைப் போலவே இருக்கிறது.



"பசு ஐந்தும் பாலாய்ச் சொரியும்" என்று திருமூலர் பாடுகிறார். இறந்து போனவர்களின் குரல் நினைவில் வந்தால் பாலைப் போல் தித்திக்கிறது. அப்படியே அவர்கள் உருவமும், அன்போடு கைகளால் அவர்கள் தடவிய நினைவும் வந்த போது இறந்த காலத்துக்கும் நிகழ்காலத்துக்கும் பேதமில்லாமல் போகிறது.

நல்ல நினைவுகளின் ஆனந்தத்தைப் போல் வேறு எதுமில்லை.



சின்ன ராட்சதன்

மூர்த்தி

ரொம்ப ரொம்ப காலத்துக்கு முன்னாலே ஒரு காட்டிலே ஒரு சின்ன ராட்சதன் வாழ்ந்து வந்தான். சின்னவனானாலும் அவனும் ராட்சதன்தானே? ஆனால் அப்பா அம்மா இல்லாத அநாதை ராட்சதன் அவன். ரொம்ப நல்லவனும் கூட. அவன் தன்னந் தனியனாக வாழ்ந்து வந்தான். தன்னோடு விளையாடுவதற்கு யாருமே இல்லை என்ற ஏக்கம் அவனுக்கு. உருவத்தில் பெரியவனாக இருப்பதினால் அவனிடம் பழகுவதற்கே யாரும் பயந்தார்கள். எல்லோருடனும் சேர்ந்து ஆடிப் பாடி மகிழ வேண்டும் என்று அவனுக்கு ரொம்ப ஆசை. ஆனால் அது நிறைவேறவே இல்லை. தனிமை அவனை வாட்டி வதைத்தது.


ஒரு நாள் பொழுது புலர்ந்தது. அன்று அந்தச் சின்ன ராட்சதனுடைய பிறந்த நாள். காலையில் எழுந்ததும் அவனுக்கு யாரும் பிறந்த நாள் வாழ்த்துக் கூறவில்லை. கோடாலியை எடுத்துத் தோளில் சாய்த்துக் கொண்டு காட்டுக்குள் போனான், விறகு வெட்டிக் கொண்டு வர. வீட்டில் அடுப்பெரிக்க ஒரு துண்டு விறகுகூட இல்லை.

தூரத்தில் யாரோ பாடுவது காதில் விழுந்தது. ரொம்ப இனிமையாக இருந்தது. பாடுபவர் ரொம்ப மகிழ்ச்சியோடு இருக்கிறார் என்பதையும் குரலின் கம்பீரத்திலிருந்து உணர முடிந்தது. அப்படிக் குஷியாகப் பாடிக்கொண்டே குதித்து ஆடியது யார் தெரியுமா? ஒரு கொழு கொழுக் கரடிக் குட்டி! உல்லாசமாகக் கானகத்துப் புல்வெளியில் பாடி ஆடிய கரடிக்கு அங்கிருந்த ஒரு கண்ணி கண்ணில் படவில்லை. ஒரு வேடன் அந்தக் கரடிக் குட்டியைப் பிடிக்கக் குழி வெட்டி, அதை இலை தழை, குச்சிகளால் மூடி வைத்திருந்தான். அது தெரியாத கரடிக்குட்டி அதில் கால் வைக்கவே தொபுகடீரென்று குழிக்குள் விழுந்து சிக்கிக் கொண்டது. திடீரென்று ஏற்பட்ட இந்த அதிர்ச்சியில் பாவம் கரடிக் குட்டிக்குத் தலை சுற்றியது. பயம் சூழ்ந்து கொண்டது.

குழிக்கு மேலிருந்து சின்ன ராட்சதன் எட்டிப் பார்த்த போது அதன் பயம் இன்னும் அதிகமாகிவிட்டது. கரடிக் குட்டிக்கு அவன் பெரிய மலையைப்போல் தோன்றினான். தன்னை அந்த ராட்சதன் எடுத்துச் சாப்பிடத்தான் போகிறான் என்று உறுதியாக நினைத்துவிட்டது.

சின்ன ராட்சதன் தன்னுடைய நீண்ட பெரிய கையைப் பள்ளத்துக்குள் தாழ்த்திக் கரடிக் குட்டியைத் தூக்கிய போது அது தன் இரு கண்களையும் இறுக மூடிக் கொண்டுவிட்டது. சின்ன ராட்சதன் மிக மிக மெதுவாக அதன் காதருகே, ''என் வீட்டுக்கு வருகிறாயா நீ? என்னோடு சேர்ந்து உணவருந்தலாம். இன்று எனக்குப் பிறந்த நாள்'' என்றான். அவன் ரொம்ப மெதுவாகப் பேசியும்கூடக் கரடிக் குட்டியின் காதில் அவன் குரல் வலியை உண்டாக்கியது. பயத்தினால் பேச முடியாமல் நடுங்கியபடி அவனது உள்ளங்கையில் உருண்டு சுருண்டு கிடந்த கரடிக் குட்டி கையிலிருந்து கீழே குதித்து, ''ரொம்ப நன்றி ஐயா, என்னைக் குழியிலிருந்து எடுத்து வெளியே விட்டதற்கு'' என்று குழறியபடிக் கூறிக் கொண்டே ஓட்டம் எடுத்தது.

அது ஓடுவதையே பார்த்துக்கொண்டு சற்று நேரம் நின்ற சின்ன ராட்சதன் ஒரு பெருமூச்சுடன் மேலே நடந்தான். அவனுக்கு எதுவுமே பிடிக்கவில்லை. அந்தத் தனிமையை எண்ணிக் குமைந்து போனான் அவன். கொஞ்ச தூரம் போனதும் மறுபடியும் யாரோ குஷியாகப் பாடுவது கேட்டது. மரங்களின் மேலாகக் குனிந்து கீழே பார்த்தான். பசும் புல் வெளியில் வெள்ளை வெளேர் என்று ஒரு முயல் தாவித் தாவிக் குதித்தபடி பாடிக் கொண்டிருந்தது. தன்னையும் தான் செய்ய வேண்டிய காரியத்தையும் மறந்து அதையே உவகையோடு பார்த்துக் கொண்டிருந்தான் சின்ன ராட்சதன்.



'தாம் தம்' என்று தன் பஞ்சு மெத்தைக் கால்களால் தரையில் தாளமிட்டபடி மரத்துக்கு மரம் தாவிய முயல் குபீரென்று அந்தரத்தில் தலை கீழாகத் தொங்கியது. பாவம், ஆனந்தமாகப் பாடி மகிழ்ந்த முயல், 'ஐயோ! ஐயோ, உதவி உதவி! என்னைக் காப்பாற்றுங்களேன்'' என்று அலறியது.

சின்ன ராட்சதனுக்குத் தெரியும், முயல்களால் ஆகாயத்தில் பறக்க முடியாது என்று. அப்படியானால் இது யாரோ ஒரு மோசக்கார வேடனுடைய வேலைத்தனம்தான். ஒரு கிளையில் சுருக்குக் கயிற்றைக் கட்டி அந்தக் கிளையை வளைத்து வைத்து அத்துடன் கண்ணிச் சுருக்கையும் இணைத்துத் தரையில் பரப்பி இருக்கிறான். முயல் அந்தச் சுருக்குக்குள் வந்ததும் வளைந்த கிளை மேலே குபீரென்று போக, அப்போது முயலின் கால்களையும் சுருக்கு இறுக்கி அத்துடன் அதையும் மேலே கொண்டு போய் விட்டது.

தலை கீழாகத் தொங்கும் வெள்ளை முயல் கீழ்ப் பார்வையாகப் பார்த்தது. தன்னை நோக்கிப் பூதாகாரமான ஓர் உருவம் வருவதைக் கண்டது. அதன் காலடிகள் பூமியை அதிர வைப்பதைக் கேட்டது. அது பேசும் போது புயல் காற்றுப் போல மரங்கள் பேயாட்டம் போட்டதைப் பார்த்தது. இத்தனைக்கும் சின்ன ராட்சதன் மெள்ளத்தான் கேட்டான்.

''நான் உன்னை விடுதலை செய்தால் நீ என்னோடு என் வீட்டுக்கு வந்து விளையாடுவாயா? என்னுடைய பிறந்த நாள் இன்று!''

முயலுக்குப் பயமான பயம். இருந்தாலும் சரி என்பதற்கு அடையாளமாகத் தலையை ஆட்டிற்று. சின்ன ராட்சதன் தன் விரல்களால் முயலின் கால்களைப் பிணைத்திருந்த சுருக்கை அகற்றி அதற்கு விடுதலை அளித்தான். விடுதலை கிடைத்தவுடன் முயல்.... ''..ந... நன்றி ஐயா, நன்றி...!' என்று கூறிக் கொண்டே தாவித் தாவி ஓடிப் போயே போய்விட்டது!

பாவம், சின்ன ராட்சதனுக்கு எப்படி இருக்கும்? ஏக்கம், ஏமாற்றம், அழுகை. அடுப்புக்கு விறகு வெட்ட வேண்டும் என்ற நினைவுகூட இல்லாமல் துவண்ட தோளில் கோடரியைப் போட்டுக் கொண்டு தொங்கிய தலையுடன் தன் வீட்டை நோக்கி நடந்தான். அவனுக்கு அவனிடமே வெறுப்பு ஏற்பட்டது.

வீட்டை நெருங்கிய போது, அவன் வீட்டுப் புகை போக்கியிலிருந்து புகை சுருண்டு சுருண்டு போவதைக் கண்டான். அது மட்டுமா? இருட்டும் நேரமாகிவிட்டிருந்தது. அவன் வீட்டினுள்ளோ பளீரென்று விளக்கு வெளிச்சம் தெரிந்தது. 'அடுப்பெரிக்க வீட்டில் ஒரு சுள்ளிகூட இல்லை, வீட்டில் விளக்கேற்ற என்னைத் தவிர அங்கு யாருமே இல்லை. அப்படி இருக்க இந்தப் புகையும் வெளிச்சமும் எப்படி?' என்று வியந்தவனாக வீட்டுக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனான்.

என்ன ஆச்சரியம்? அங்கே...அவன் வீட்டுக் கூடத்தில் கரடிக் குட்டியும் அதன் தாயாரும், முயல் குட்டியும், அதன் சகோதர - சகோதரிகளும் அப்பாவும் அம்மாவும்- மற்றும் கானகத்து விலங்குகள் யாவும் கூடி இருந்தன. நட்ட நடுவில் சின்ன ராட்சதன் சாப்பிடும் பெரிய தட்டில் விதம் விதமான பட்சணங்கள் பக்குவமாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

''சின்ன ராட்சதனே! எங்கள் குழந்தைகளைக் காப்பாற்றிய உனக்கு எங்களுடைய உளமார்ந்த பிறந்ததின வாழ்த்துக்கள்!'' என்று கரடியும் முயலும் மற்ற எல்லா மிருகங்களும் கைகொட்டி வரவேற்றன. சின்ன ராட்சதனுக்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி. அதன் பிறகு தனிமையும் அவனை விட்டு ஓடிவிட்டது. இப்போது காட்டு மிருகங்களெல்லாம் அவன் வீட்டில்தான்!







அன்புள்ள கோகுலம் ஆசிரியருக்கு!

[சென்ற இதழில் வெளியான போக்குவரத்து விதிகள் பற்றிய கட்டுரையைப் படித்துச் சில வாசகர்கள் எழுதிய கடிதங்களில் எழுதியிருப்பது சரிதானா என்று நமது காமிரா 'லென்ஸ்' மூலம் ஆராய்ந்தோம். காமிரா பொய் சொல்லுவதில்லையே! அதிகாரிகள் ஆவன செய்வார்களாக!

— ஆசிரியர்]

தங்கள் இதழில் 'நடு ரோட்டில் நடக்கக் கூடாது, நடைபாதையில் நடக்க வேண்டும்' என்று எழுதியிருந்ததைப் படித்தேன். நாங்கள் வசிக்கும் பகுதிகளில் நடைபாதையில் நடக்கும்படியாகவா அது இருக்கிறது? மாடுகள் கட்டுவதற்கும், கழிவிடங்களாகவும் பயன்படுகிறது. நடைபாதை இப்படி இருப்பதால் எங்களைப் போன்ற சிறுவர்கள் நடு ரோட்டில் நடக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

ராஜ்குமார் (வயது 10)

குழந்தைகளுக்குப் போக்குவரத்துப் பூங்காவில் போக்குவரத்து விதிகள் பற்றிய பயிற்சி கொடுக்கப்படுகிறது

■ பஸ்ஸைப் பிடித்துக் கொண்டா.... உயிரைப் பிடித்துக் கொண்டா?

■ வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்துக்கு முன்னாலுள்ள - வண்டிகளை இங்கு நிறுத்தக் கூடாது என்ற அறிவிப்புள்ள இடத்திலேயே டாக்ஸிகள் நிற்கும் கோலம்.

■ பாதசாரிகள் கடந்து செல்லக் குறித்துள்ள கோடிட்ட பகுதியிலேயே வாகனங்கள் இப்படி நின்றால் பாதசாரி எங்கு நடந்து கடப்பது?







- பேருந்துகள் சாலையின் ஓரத்தில் பஸ் ஸ்டாப்பின் அருகே நிற்பதில்லை. இப்படி நடு ரோட்டில் நிற்கின்றன.
- திறந்த சாக்கடைகள்.
- இப்படிப்பட்ட நடைபாதைகளில் எங்களால் எப்படித்தான் போக முடியும்?

என்கிற விஷயம் தற்போது சரியல்ல. அந்தப் பூங்காவில் போக்குவரத்து விதிகள் பற்றிய பயிற்சி இப்போது அளிக்கப்படுவதில்லை. அந்தப் பூங்காவை ஏற்படுத்திய பர்மாஷெல் கம்பெனி இப்போது பண உதவியை நிறுத்தி விட்டது என்று அங்கு கூறுகிறார்கள்.

எங்களைப் போன்ற குழந்தைகளுக்குப் போக்குவரத்து பற்றிய பயிற்சி அளிப்பதற்கு வேறு வழியே இல்லையா?

கணேஷ், சங்கர் (வயது 10)

சாலை விதிகளைப் பற்றிய கட்டுரையைப் படித்தேன். அதில் நீங்கள், 'சுரங்கப் பாதை மூலமாகப் பாதையைக் கடக்க வேண்டும்' என்று கூறியுள்ளீர்கள். ஆனால் அதில் பல இடையூறுகள் உள்ளன. முதலாவதாக அவைகள் மிகவும் அசுத்தம் நிறைந்தவைகளாக உள்ளன. விளக்குகள் சரிவர எரிவது இல்லை. மழைக் காலங்களில் குளத்தைப் போல் அங்கு தண்ணீர் தேங்கி நிற்கிறது. மற்றும் பிச்சைக்காரர்கள் தொல்லையும் அதிகமாக உள்ளது. என்னைப் போல் பெண்கள்

தனியாகப் போவதற்குப் பயமாகக் கூட இருக்கிறது.

சபிதா (வயது 9)

நடைபாதையில் நடப்பது அவசியம் என்று கூறியுள்ளீர்கள். எங்கள் சினிவாசபுரம் அருகில் பட்டினப்பாக்கம் டெர்மினஸ் உள்ளது. சாலையின் கடைசி வரை சென்று திரும்பி வர பஸ் டிரைவர்கள் சுணங்குவதால் நடுச் சாலையிலேயே திருப்பி நடைபாதையை இடித்து நாசம் செய்கின்றனர். இதனால் நடைபாதை பல இடங்களில் குண்டும் குழியுமாக உள்ளது. ஆகவே நாங்கள் தெருவில்தான் நடக்க வேண்டியுள்ளது.

ஏ. சிவசுப்பிரமணியம் (வயது 13)

பேருந்துகளில் ஏறும் போதோ அல்லது இறங்கும் போதோ பேருந்து நிறுத்தங்களில்தான் ஏறவோ இறங்கவோ வேண்டும் என்பது முடியாத காரியம். பேருந்து வண்டிகள் பேருந்து நிறுத்தங்களில் சரியாக நிறுத்தப்படுவதில்லை. இதனால் நாங்கள் பேருந்து நிறுத்தத்தில் சரியானபடி இறங்கவோ ஏறவோ முடிவதில்லை. அங்கு நிறுத்தப்பட்டிருக்கும் டாக்ஸி, சைக்கிள் ரிக்ஷா முதலியவை பேருந்தை நடு ரோட்டிலோ சற்றுத் தள்ளியோ நிறுத்தும்படி தூண்டுகின்றன. எல்லோரும் ஏன் சரியான இடங்களில் வண்டிகளை நிறுத்தக் கற்றுக் கொள்ளக் கூடாது?

கல்யாணராமன் (வயது 14)

தெருக்களில் நடை பாதைகளில் நடப்பது கடினமாக உள்ளது. காரணம் அந்த நடைபாதைகள் அசுத்தம் நிரம்பியவையாக உள்ளன. பல இடங்களில் பெரும் சாக்கடைக் குழிகள் திறந்து கிடக்கின்றன. இதனால் இருட்டு வேளைகளில் பலர் அக்குழிகளில் விழுந்து விட நேரிடுகிறது. மழைக் காலங்களில் ஆபத்துக்கும் கேட்கவே வேண்டாம்!

பி. லதா (வயது 10)

பெருஞ்சாலைகளைக் கடக்கும் போது, இவ்விதிகளைக் கடைபிடிப்பது கடினமாக உள்ளது. 'பெடஸ்ட்ரியன் கிராஸிங் (*Pedestrian crossing*) எனப்படும் பாதசாரிப் பாதைகளிலேயே சைக்கிள், மோட்டார் பைக் போன்ற வாகனங்களை நிறுத்தி விடுகின்றனர். சென்னை அண்ணாசாலையில், ஸ்பென்சருக்கு அருகில் உள்ள ''பெடஸ்ட்ரியன் கிராஸிங்கில்'' பேருந்துகளை நிறுத்தப் படுகின்றன.. பிளாட்பாரத்துக்கும், பெடஸ்ட்ரியன் கிராஸிங்குக்கும் இடையில் சைக்கிள் பாதை உள்ளது. எனவே சிக்னல் விளக்கு எரிந்து, பாதசாரிகள் கடக்க வேண்டிய வேளையில், சைக்கிள்களும் பேருந்துகளும் நின்று தடை செய்கின்றன.

நளினி (வயது 15)

■ பாதாள உலகத்துக்கு இந்த வழியாகப் போகவும்...!

■ காலால் நடப்பவருக்குக் கால்நடைகளினாலும் தொல்லை, சுகாதாரக் குறைவு.





சைக்கிள் கற்ற சுப்பு மாமா கதை!

சங்கர சுப்பு மாமாவுக்கு
சைக்கிள் கற்கும் ஆசைவர,
கிங்கரன், கோபு இவர்களிடம் போய்க்
கேட்டாரய்யா விண்ணப்பம்.

நாற்பது வயது மாமாவுக்கு
நாங்கள் பாடம் சொல்வதா?—இதை
ஏற்பது மிகவும் கடினம் கடினம்
என்றான் கிங்கரன் கோபுவிடம்.

சைக்கிள் பின்னே ஓடிவர
சரியாய் மணிக்கு அரை ரூபாய்
பைக்குள் போட்டு விடவேண்டும்—எனப்
பகர்ந்தனர் இருவரும் சுப்புவிடம்.

நொறுக்குத் தீனி, முறுக்கு, வடை
இருக்கும் இடத்தில் வரவேண்டும்.
மறுப்பு ஏதும் ஏற்பட்டால்
மாட்டோ மென்றார் இருவருமே.

வேறு ஆளைக் கேட்பதற்கு
வெட்கம் குறுக்கே நின்றதனால்
கோரும் ஆசை நிறைவேற்றக்
கொடுத்தா ரிசைவை மாமாவும்.

காதர் கடையின் சைக்கிளெல்லாம்
காற்றாய்ப் பறக்கும் என நினைத்துச்
சவாரி செய்து பார்த்தாலோ
சனியன் அதுஓர் எருமைக்கடா.

பாட்டிக கால வண்டியிலே
பாங்காய் மாமா ஏறுகையில்—அவர்
வேட்டி மாட்டிச் சாக்கடையில்
விழுந்தா ரய்யா 'பொத்'தென்று.

வெள்ளை வேட்டி கறுப்பாக
விழித்தார் மாமா முறைப்பாக
மானம் போச்சு என்றபடி
சைக்கிளைப் பிடித்தார் ஒருகையில்.


இருபுறம் சிறுவர்கள் பிடித்துவிட
ஏறினார் மாமா மறுபடியும்
ஒருவித ஓசை கேட்டவுடன்
உணர்வை இழந்தார் மாமாவும்.

சைக்கிள் பெடலில் சரிபாதி
சாய்ந்தது தரையில் மறுபாதி
விழித்து எழுந்த மாமாவுக்கோ
'விண்விண்' என்றது மண்டை வலி.

மக்கள் பார்த்துச் சிரித்திடவே
மாமா வெட்கித் தலை குனிந்தார்
காலா காலத்தில் கற்றிருந்தால்
கவலை இல்லை என நினைத்தார்


உரிய நேரத்தில் செய்யும் செயல்கள்
உயர்த்திப் புகழ்ந்து போற்றப்படும்
காலங் கடந்து செய்பவைகள்
காயலான் கடைப் பொருளாகிவிடும்.

— கோகுலன்





பலே பாலுவும் பாட்டில் பூதமும் • 9
கதை: வாண்டுமாமா - சித்திரம்: செல்லம்
பாலு பூதத்துக்கு ஒரு 'லாலிபாப்' வாங்கிக் கொடுத்தான். ஷேர் அதைச் சுவைக்கப் போகும் போது...
தம்பி, தம்பி! பாப்பா மிட்டாய் கேக்குதப்பா கொடுக்கறியா?
பாலு பூதத்தின் 'லாலிபாப்' மிட்டாயை, வாங்கிக் குழந்தைக்குக் கொடுத்து விடுகிறான்.
குழந்தையைப் பாத்துக்க. நான் போய் மார்க்கெட்டிலே கொஞ்சம் சாமான் வாங்கி வந்து விடுகிறேன். இந்தா அதுக்காகக் காசு - உன் லாலிபாப்புக்கும் சேர்த்து...
பூதமானாலும் அதற்கும் ஆசை இருக்காதா? லாலிபாப் பறிபோனதை விரும்பாத பூதம் பாலு பார்க்காத போது அதனிடமிருந்து அதைப் பிடுங்கி மறைத்துக் கொள்ளுகிறது.
வீல்...வீல்...
சீச்சீ...எத்தனை பெரிய குரல்...! நாராசமாக இருக்கே...!
பிரபுவே குழந்தையின் அழுகையை இதோ நொடியில் நிறுத்துகிறேன்.
சர்க்கஸ்
பூதம் சர்க்கஸ் அரங்கிலிருந்து இரண்டு பஃபூன்களைத் தூக்கி வருகிறது.
இங்கே வேடிக்கை காட்டியது போதும். என்னோடு வாருங்கள்.
ம்...குதியுங்கள்... தாண்டுங்கள்...ம் குழந்தை சிரிக்க வேண்டும்....
ஆனால் குழந்தை சிரிக்கவில்லை. அழுகையும் நிற்கவில்லை.


எப்படியும் குழந்தையைச் சமாதானப்படுத்த முனைகிறது. மிருகக் காட்சிசாலைக்கு ஓடி ஒரு ஒட்டகத்தை ஓட்டிக்கொண்டு வருகிறது.
ஒட்டகம் கட்டை அவிழ்க் காதே
சர்க்கஸிலிருந்து. அவனை ஒட்டகத்தின் மீது ஏற்றி...
ம்... ஒட்டகத்தை உன் குதிரை மாதிரி விரட்டி ஓட்டப்பா... ...ம்...
விறு...விறு... வா... நல்ல தமாஷ் ஷோ...!
நிறுத்தவில்லை. நாடகக்கொட்டகைக்கு ஓடுகிறது பூதம்.
ஏய்...ஏய்... நாடகத்திற்கு வேணுமப்பா அந்தப் பொய்க்குதிரை...எங்கே இழுத்துப் போகிறாய்?
ஒட்டகம், போலிக்குதிரை, பபூன்கள் எல்லாரையும் ஆட்டி வைக்கிறது பூதம், அப்படியாவது குழந்தை அழுகையை நிறுத்தாதா என்று...
ம்... ஆடுங்கள்... வேகமாக... தமாஷ் காட்டுங்கள்...
ஷேர், குழந்தையின் அழுகை நிற்கவில்லை. அதோ அதன் தாயார் வருகிறாள். ஒருவேளை அழுகையின் காரணம் அவளுக்குத் தெரியலாம்.
பொல்லாத குழந்தை இத்தனை வேடிக்கைக்கும் சிரிக்கவில்லையே. லாலிபாப்பைக் கொடுக்க வேண்டியது தான்.
அம்மாவைக் கண்ட குழந்தை தன் பிஞ்சு விரல்களை பூதத்தை நோக்கி நீட்டியது.
ஏண்டா கண்ணு... எதுக்கு இப்படி அழுகிறாய்...?
இதை விரும்பித்தான் அழுகிறது போலும்.

ரமலான் மலரின் ரசமான துளிகள்

பறக்கும் குதிரை

கவிஞர் ஒருவருக்கு ஒரு குதிரையை அன்பளிப்பாகத் தருமாறு பணித்தார் அரசர். குதிரை லாயத்தின் மேலாளனோ அவருக்கு ஒரு கிழக் குதிரையைக் கொடுத்தான். அதனை அவர் தம் வீட்டுக்கு கொண்டு போகும் வழியிலேயே அது இறந்து விட்டது.



''அடுத்த நாள் அரண்மனைக்குக் கால்நடையாகவே கவிஞர் வந்த பொழுது, ''நான் உமக்கு நேற்றுக் கொடுத்த குதிரை மீது வந்திருக்கக் கூடாதா?'' என்று அரசர் வினவினார்.


அதற்கு அக் கவிஞர், ''அரசர் பெருமானே! தாங்கள் எனக்கு அன்பளிப்பாக வழங்கிய குதிரை மிகவும் துரிதமாகச் செல்லக்கூடியது. எனவே அது ஒரே இரவிலேயே பூமியிலிருந்து வான மண்டலத்துக்குப் பறந்து சென்று விட்டது'' என்று கூறினார்.

சத்தியம் செய்த புதுமை

இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியின் தொடக்க காலத்தில் முஸஃபர் நகர் மாவட்டத்தில் உள்ள ஓர் ஊரில் ஒரு நில உரிமை பற்றி இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே தகராறு ஏற்பட்டது. அம் மாவட்டத்தின் கலெக்டராக ஓர் ஆங்கிலேயர் இருந்தார். அவர் முஸ்லிம்களை நோக்கி, ''அது உங்களுக்குத்தான் உரியது என்று சான்று கூறக்கூடிய ஓர் இந்துவைக் காட்டுங்கள். அவர் என் முன் அவ்விதம் கூறிவிட்டால் அந்நிலம் உங்களுக்கே என்று தீர்ப்பு வழங்கி விடுகிறேன்'' என்று கூறினார். அதற்கு முஸ்லிம்கள், ''அப்படிப்பட்ட இந்து ஒருவர் எங்களுக்குக் கிடைக்க மாட்டார்'' என்று கூறிவிட்டனர்.

அதன்பின் கலெக்டர் இந்துக்களை நோக்கி, ''அந்த நிலம் உங்களுக்கே உரியது என்று சான்று பகரக்கூடிய முஸ்லிம் ஒருவரைக் காட்டுங்கள். அவர் என் முன் அவ்விதம் கூறினால் நிலம் உங்களுக்கே உரியது என்று தீர்ப்பு வழங்கிவிடுகிறேன்'' என்று கூறினார். இந்துக்கள் தங்களுக்குள் ஆலோசனை செய்து முஸ்லிம் பெரியார் ஒருவரின் பெயரைக் கூறி, ''அவர் ஒருபோதும் பொய் சொல்லி நாங்கள் அறியோம். அவர் எவ்வாறு சொல்லுகின்றாரோ அதன்படி நீங்கள் தீர்ப்பளியுங்கள். நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம்'' என்று கூறினர்.

இதன்பின் கலெக்டர் அந்த முஸ்லிம் பெரியாரைத் தம்முடைய நீதிமன்றத்துக்கு வந்து சான்று பகருமாறு அழைக்க, அவரும் நீதிமன்றத்திற்கு வந்தார். ''அந்நிலம் இந்துக்களுக்கே உரியது. அதன் மீது முஸ்லிம்களுக்கு அணுவத்தனை உரிமையும் கிடையாது'' என்று கூறினார் அந்த முஸ்லிம் பெரியார்.




அவருடைய சாட்சியத்தின்படி கலெக்டர் அந்நிலத்தை இந்துக்களுக்கே உரிமையாக்கித் தீர்ப்பு வழங்கினார்.

முஸ்லிம்கள் அவ்வழக்கில் தோற்றுப் போனாலும் உண்மை வென்றது.

ஆமாம்சாமிகள்

திடுதிப்பென ஒரு நாள் ஷா நஸீருத்தீன், தன் அமைச்சர் பிரதானிகளை நோக்கி, நீதியில் மேலானவர் யார்? — நானா, நௌஷேர்வானா?'' என்று வினவினார். அது கேட்டு அவர்கள் அனைவரும் என்ன கூறுவதென்று அறியாது விழித்தனர். 'நீங்கள்தாம் நௌஷேர்வானைவிட நீதியில் சிறந்தவர்' என்று கூறினால் தங்களை முகஸ்துதிக்காரர்கள் என்று ஷா இழிவாக எண்ணக்கூடும் - அதற்கு மாறாகக் கூறினால் ஷா வருத்தப்படக் கூடும் என்று கருதி மௌனமாக இருந்தனர்.



ஷா கூறினார்: ''நல்லது - உங்களில் எவரும் என் கேள்விக்குப் பதில் கூற முன்வரவில்லை- எனவே நானே கூறு கிறேன்.'' இது கேட்ட அங்கிருந்தோர் தங்களின் தலையிலிருந்து பெரும் சுமை நீங்கியதுபோல் உணர்ந்தனர்.

ஷா புன்முறுவலுடன் கூறினார்: ''நௌஷேர்வானைவிட நான்தான் நீதி யில் மேலானவன்.'' உடனே அமைச் சர்கள் அனைவரும், ''ஆம், ஆம்-அதுவே உண்மை'' என்று பெருங் குரலில் முழங் கினார்கள்.

அவர்கள் முழக்கம் ஓயும் வரை காத்திருந்த ஷா அவர்களை நோக்கி, ''அடடே, காரணத்தை நான் கூறு முன்னரே என் பதிலை நீங்கள் ஏற்றுக் கொண்டு விட்டீர்களே!'' என்று கூறினார்.

''ஆமாம். ஆமாம். காரணத்தை யும் நீங்களே கூறிவிடுங்கள்'' என்று மீண் டும் அமைச்சர்கள் 'ஆமாம்' போட்ட தும் ஷா கூறலானார்:

''நௌஷேர்வானுக்கு அறிஞர் பெரு மகன் புஸுர்க்மிஹிர் என்பவர் அமைச்சராக இருந்தார். அரசர் என்றே னும் சிறிது வழி தவறிச் சென்றாலும் உடனே அவ்வமைச்சர் பெருமகன் அவரைத் தடுத்து நேர் வழியில் அழைத் துச் செல்வார். ஆனால் என் அமைச்சர் களான நீங்களோ, நான் கூறுவதற் கெல்லாம் ஆமாம் போட்டு என்னைப் படுகுழியில் தள்ளவே உங்களை அறியா மல் முயன்று கொண்டிருக்கிறீர்கள். சற்றுமுன்கூட அவ்விதமே செய்தீர்கள். ஆனால் நான் அப்படுகுழியில் விழாது எச்சரிக்கையாக இருந்து கொண்டேன். எனவே புஸுர்க்மிஹிர் போன்ற அமைச்சரைப் பெற்றிருந்த நௌஷேர் வான் நீதிமானாக இருந்ததை விட உங்களைப் போன்ற ஆமாம்சாமிகளைப் பெற்றிருக்கும் நான் நீதிமானாக இருப் பதே பெரிய சாதனையாகும். எனவே அவரைவிட நானே மேலானவன் என்று கருதுகிறேன்.''

அமைச்சர்கள் நாணமுற்றுத் தலை கவிழ்ந்தார்கள். (நல்ல காலம் அதற்கும் ஆமாம் போடாமலிருந்தார்களே!)

பழைய ஸமூசா!

இப்பொழுது ஸமூசா எனப்படும் முக்கோண வடிவுத் தின்பண்டம் இன் றைக்கு அறுநூறு ஆண்டுகளுக்கு முன் பும் வட இந்தியாவில் விருந்துகளில் பரிமாறப்பட்டதாக வரலாறு உள்ளது. 'ஸன்பூஸா' என்னும் பாரசீகச் சொல்லே ஸமூஸா என்று மருவி உள் ளது. அவ்வார்த்தையின் பொருள் ''முக்கோணம்'' என்பதாகும்.

பண்புடைமை


முகலாயப் பேரரசர் ஷாஜஹான் எவரையும் — தம்மிடம் குற்றேவல் புரி யும் ஊழியனையும்கூட, 'நீ' என்று கூற மாட்டார்- 'நீங்கள்' என்றுதான் கூறு வார்.

ஆண்டவன் முன்னால்!

ஓர் அரசர் துறவி ஒருவரை நோக்கி, ''தாங்கள் அல்லாவை அணுகும் வேளையில் என்னையும் நினைவுகூறுங்கள்'' என்று கூறினார்.

அது கேட்ட அந்தத் துறவி புன்முறு வல் பூத்து, ''நான் அல்லாவை அணுகும் வேளையில் என்னையே மறந்து விடுவேனே; தங்களை எவ்வாறு நினைவு கொள்வேன்?'' என்று பதில் கூறினார்.

(புனித ரமலான் அறிவு மலரிலிருந்து எம். அப்துல் வஹ்ஹாப், அப்துல் ஹக் ஆகியோர் தொகுத்து 'பிறை'யில் வெளியிடப்பட்டது.)



வாடா மலர்

மக்கள் பசியுடன் வருந்தினால், அது இறைவன் பசியுடன் இருப்பதற்கு நிகர் ஆகும், —இராமலிங்க அடிகள்

நல்ல காரியங்கள் செய்யப் போகும் போது சகுனம் பார்க்கத் தேவை யில்லை. —பாரசீகப் பழமொழி


ஜெய் ஹனுமான் 26
கதை: ரா.கணபதி
சித்திரம்: விஜு
சுதாரித்துக் கொண்டு எழுந்த ஹனுமார் தன் முஷ்டியால் மடியபடி ஓங்கிக் குத்த, முழங்கால் மடியப் பூமியில் விழுந்து மூக்கு வாய் காதுகளில் ரத்தம் வழிய நினைவு தப்புகிறான், ராவணன்.
ராவணனுடைய சக்தி ஆயுதம் தாக்கி மூர்ச்சையாகிக் கிடந்த லக்ஷ்மணனை மாருதி வாரி எடுக்க, அப்போது அவருக்குள்ள வரபலத்தினால் சக்தி ஆயுதம் வலுவிழந்து விட லக்ஷ்மணனுக்கு நினைவு திரும்புகிறது.
இந்த நிலையில் ராவணனுக்கும் மூர்ச்சை தெளிய ராமபிரான் அவனுடன் போரிட வருகிறார்.
கருடன் மீதமர்ந்து, நாராயணன் யுத்தம் புரிவதுபோலத் தாங்கள் என் மீதமர்ந்து போர் செய்ய வேண்டுகிறேன்.
ராமனைக் கொல்லுமுன் இந்தக் குரங்கை வதைப்பேன்.
என் பிரிய அனுமனைத் தாக்கும் இந்த அரக்கனை என்ன செய்கிறேன் பார்.
ராமனது கணைகளால் ராவணனது தேர் உடைந்து, சாரதியும் குதிரைகளும் மாண்டு நிலைகுலைந்து போகிறான் மாவீரன் ராவணன்.


ராவணா, இன்று பெரும்போர் செய்து களைத்து விட்டாய். தேரற்று ஆயுதமற்று நிற்கும் உன்னைக் கொல்ல எனக்கு விருப்பமில்லை. ஆகவே இன்று போய் நாளை புதிய தெம்புடன் வா...
மறு நாள் கும்பகர்ணன் போருக்கு வந்தான்.
அதோ வருபவன் கும்பகர்ணன். அவன் கையிலுள்ள சூலாயுதம் எதிரியைத் தாக்கிவிட்டு அவனிடமே திரும்பி விடும் சக்தி பெற்றது.
வானரங்களைக் கொல்லுவது என் எண்ணமில்லை. ராமனைக் கொல்லுவதே என் குறிக்கோள்.
ஹா.. ஹா... ஹா! அற்பக் குரங்கே, நீதான் அனுமனா? இதோ உன் மார்பைப் பிளக்கிறேன் பார்.
அது அத்தனை சுலபமல்லடா அரக்கனே, இதோ பார்....
அனுமனின் மார்பைத் தாக்கிப் படுகாயப் படுத்திய கும்பகர்ணனுடைய சூலாயுதம் மறுபடி அவனிடம் திரும்புகிறது. சுக்ரீவன் கும்பகர்ணனை எதிர்க்கிறான்.
என் மன்னரின் மீதா உன் சூலாயுதத்தை வீசினாய்? இதோ பார் அதன் கதியை.
தொடரும்

சூனியம் என்றால் என்ன?

சூனியப் பிரதேசம் என்றால் அங்கு எவ்விதமான பொருளும் இருக்காது என்றுதான் நம்மில் பலர் எண்ணி இருக்கிறோம். ஆனால் விஞ்ஞானிகளின் கருத்துப்படி அப்படி எதுவுமே இல்லாத ஓர் இடம் இருக்கவே முடியாது. வாயுக்களின் மாலுக்யூலோ, மிக நுண்ணிய புழுதி அணுக்களோ இல்லாத ஒரு பிரதேசம் இருக்கவே முடியாது என்கிறார்கள். ஆகவே சூனியப் பிரதேசம் என்பது மிக மிகக் குறைவான பொருள்கள் உள்ள இடம் என்றாகிறது. மிக நல்ல சூனிய வெளியில் அநேகமாகக் காற்றோ புழுதியோ மற்ற பொருள்களின் அடையாளங்களோ இல்லாமல் இருக்கலாம். அநேகமாக என்ற பதத்தைக் கவனத்தில் கொள்ள வேண்டும். **பூரணமாக** என்று சொல்லவில்லை.

சூனியப் பகுதியை ஏற்படுத்த மிகச் சுலபமான வழி, எங்கு சூனிய வெளி ஏற்படவேண்டுமோ அங்குள்ள காற்றை 'பம்ப்' செய்து வெளியேற்றிவிடவேண்டும். மின்சார விளக்கினுள் (பல்ப்களிலிருந்து) அது தயாரிக்கும் இடத்தில் மிகச் சக்தி வாய்ந்த வாக்வம் பம்புகள் மூலமாகக் காற்றை வெளியேற்றிவிடுகிறார்கள். அதனுள் கொஞ்சம் காற்று இருக்குமானாலும் அதில் உள்ள பிராண வாயு பல்பின் உலோக இழையை (ஃபிலமெண்ட்) எரித்துச் சாம்பலாக்கிவிடும். நவீன மின்சார பல்புகள், ரேடியோ டெலிவிஷன் செட்களில் உள்ள வால்வ்கள் ஆகியவற்றிலும் அவை சீல் செய்யப்படுமுன் அதனுள்ளிருந்து முடிந்த அளவுக்குக் காற்றை வெளிப்படுத்திவிடுகிறார்கள்.

சூனியமாக்கப்பட்ட இடத்தினால் நாம் அடையும் பலன்களுக்கு மிகச் சிறந்த உதாரணமாக விளங்குவது தர்மாஸ் பிளாஸ்க் என்னும் வாக்வம் பிளாஸ்குகள். இரு சுவர்களைக்கொண்ட இந்த அமைப்பின் சுவர்களுக்கிடைப்பட்ட பிரதேசம் சூனியமாக்கப் பட்டிருக்கும். இதனுள் மிகச் சில மாலுக்யூல்கள் இருப்பினும் அவை ஒன்றுக் கொன்று வெகு தொலைவிலிருக்கும். இதனால் வெப்பக் கடத்தல் தடுக்கப்படுகிறது. ஆகவே பிளாஸ்கில் குளிர்ச்சியான அல்லது சூடான பொருள்களை வைத்தால் அவை நெடுநேரத்துக்கு அப்படியே இருக்கும்.





தென் துருவத்தில்-

பூமியின் அடிப் பக்கத்தில் தென் துருவத்தையொட்டி இருப்பது அண்டார்க் டிக் பிரதேசம். உலகின் மிகப் பெரிய கண்டங்களுள் அண்டார்க்டிகா ஐந்தாவது இடத்தை வகிக்கிறது. ஐரோப்பாவும், ஐக்கிய அமெரிக்காவும் ஒன்று சேர்ந்தால் எத்தனை விஸ்தீரணம் இருக்குமோ அத்தனை பெரியது அண்டார்க்டிகா. உலகிலேயே மிகமிகக் குளிரான, நிர்மானுஷ்யமான ஒரு பிரதேசம் இதுதான். உலகின் மிக மூர்க்கமான கடல்களால் சூழப்பட்டுள்ள இடம் இது. மிகக் கடுமையான புயல் காற்று, பனிப் புயல், மிக மிகக் குறைவான மழை, பயங்கரமான சீதளம் ஆகியவை இப்பிரதேசத்தை எதற்கும் பயனற்ற பகுதியாக்கியுள்ளன. இப்பிரதேசத்தைக் கதகதப்பாக்கப் போதுமான சூரிய வெளிச்சம் கிடையாது. வருஷ முழுவதும் பனி மூடிய பகுதிகள். உலகிலேயே மிகக் குறைவான சீதோஷ்ண நிலை இங்குதான் - மைனஸ் 38 டிகிரி சென்டிகிரேடு. இத்தனை கடுமையான உறைநிலையில் எதுவுமே இங்கு கெட்டுப் போவது கிடையாது. துருப் பிடிக்காது.

இத்தகைய பனிப் படலத்தின் அடியிலே என்னதான் இருக்கிறது? அதைப் பற்றிக் கூறும் அளவுக்கு அங்கு ஆராய்ச்சிகள் ஏதும் விரிவாகச் செய்யப்படவில்லை. அங்கு காணப்படும் தாவரங்கள் மிக எளிய அமைப்பாலான பாசிகள், லிச்சென், காளான் ஆகியவைதான். கடல் நீரில் கிடைக்கும் பொருள்களை உண்டு வாழக்கூடிய பிராணிகளும் பறவைகளும் மட்டுமே இங்கு காணப்படுகின்றன. ஸ்குவா கல்ஸ், ஸ்னோயி பெட்ரல்ஸ், பல வகை பெங்குவின்கள் ஆகிய கடற் பறவைகள்தான் இங்கு காணப்படுகின்றன. அதுவும் இக்கண்டத்தின் கடற்கரை ஓரங்களில். சீல் என்ற பிராணியும் ஆர்க்டிக் பகுதிகளில் உண்டு. அண்டார்க்டிகாவில் ஒரே தொழில் திமிங்கில வேட்டைதான். ஆனால் ஏராளமான திமிங்கிலங்கள் வேட்டையாடப்பட்டுவிட்டமையால் — திமிங்கில வேட்டையை ஓர் அளவுக்குக் கட்டுப்படுத்தச் சட்டமியற்றி இருக்கிறார்கள்.


குதிரை மனிதர்கள்

ரொம்ப காலத்துக்கு முன்னாலே நீங்கள் வாழ்வதாக வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் அப்போது குதிரைகளையே பார்த்ததில்லை. திடீரென்று ஒரு நாள் குதிரை மீது மனிதர்கள் வேகமாக வருகிறார்கள். ஓடைகளைத் தாண்டுகிறார்கள், குதிரைகளின் முதுகிலிருந்தபடியே. அப்போது நீங்கள் என்ன நினைப்பீர்கள்? குதிரை மீதுள்ள மனிதர்களோடு அது அப்படியே ஒரு பிறவியாக்கும் என்றுதானே ?

புராதன கிரேக்கர்களின் இதிகாசங்களில் குதிரை மனிதர்களைப் பற்றி நிறைய வருகிறது. நமது புராணங்களிலும் குதிரை முகத்தோடுகூடிய மனிதர்கள் (தும்புரு), புலிக் கால் மனிதர்கள் எல்லாரும் வருகிறார்கள். கிரீஸ் நாட்டில் தெஸலே (Thessaly) என்ற மலைப் பகுதியில் ஓர் இன மக்கள் வாழ்ந்து வந்தார்கள். இவர்கள் குதிரைகள் மீது அமர்ந்து காளைகளை வேட்டையாடுவார்களாம். குதிரை மீது அமர்ந்து அற்புதமான சாகஸங்களைச் செய்யக்கூடிய அவர்களைச் சுற்று வட்டாரத்தில் உள்ளோர் இவர்களைக் குதிரை மீது அமர்ந்துள்ள மனிதர்களாகவே நினைக்கவில்லை. குதிரை உடலோடு ஒட்டிப் பிறந்தவர்களாகவே கருதினார்கள். இவர்களுக்கு ஸெண்டார்கள் என்று பெயர்.

கிரேக்க இதிகாசக் கதைகளில் சொல்லப்படும் ஸெண்டார் என்ற குதிரை மனிதர்களின் இனம் தெஸலே, அர்காடியா என்ற மலைப் பிரதேசங்களில் வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது. முரட்டுத் தனமும் நாகரிகமற்றவர்களாகவும் இவர்கள் இருந்ததாக ஹோமர் என்ற புகழ்பெற்ற கிரேக்க கவிஞர் குறிப்பிடுகிறார். கிரேக்க இதிகாசங்களில் வரும் கதாபாத்திரங்கள் எல்லாமே சாகஸங்கள் புரிவதில் வல்லவர்கள். ஸெண்டார்களும் இதற்கு விதிவிலக்கல்ல. ஸெண்டார்களுடன் கிரேக்கர் நடத்திய போர்களுக்கு ஒரு வகை உள் அர்த்தம் இருக்கிறது. நாகரிகத்துக்கும் அநாகரிகத்துக்கும் நிகழ்ந்த போராட்டத்தையே இவை குறிப்பிடுகின்றன. குதிரை மனிதர்களின் உருவகம் இதுதான்.






வெட்டுக்கிளிக்குக் காது உண்டா?

'இவைகளுக்குக் கண்கள் கிடையாது, காதுகள் இல்லை; இவைகளால் பொருள்களைக் காண முடியாது. ஒலியைக் கேட்க முடியாது- இவைகள் தூங்குவது இல்லை' என்று நாமாகச் சில ஜீவராசிகளைப் பற்றித் தவறான முடிவுக்கு வந்து விடுகிறோம். அவைகள் பார்வைக்கு விநோதமாக இருப்பதினாலும் நமக்கு இம்மாதிரியான எண்ணம் ஏற்பட்டிருக்கலாம். தத்துக்கிளி — வெட்டுக்கிளி என்கிறோமே இதுவும் விசித்திரமான தோற்றம் கொண்டதுதான். வெட்டுக் கிளிக்குக் காதுகள் உண்டு, அவைகளால் கேட்க முடியும் என்று கூறினால் உங்களுக்கு வியப்பாக இருக்கும். ஆனால் உண்மையில் 'கிராஸ்—ஹாப்பர்ஸ்' (Grass hoppers) என்னும் வெட்டுக்கிளிகளுக்குக் காதுகள் இருக்கின்றன.

வெட்டுக்கிளிகளில் பல வகைகள் இருந்த போதிலும் பொதுவாகப் பார்வைக்கு எல்லாம் ஒரே மாதிரியான தோற்றம் கொண்டவைதான். வலுவான தாடைகளையும் மூன்று ஜோடிக் கால்களையும் கொண்டவை. இரு ஜோடி இறக்கைகள் உண்டு. முதல் ஜோடி இறக்கைகள் வழுவழுப்பாகவும் நீண்டும் இருக்கும். அடுத்த ஜோடி அடியில் மடங்கிய நிலையில் அமைந்திருக்கும். பின்னங் கால்கள் இரண்டும் தாவுவதற்குப் பயன்படும். நீளமானது நன்கு வளர்ச்சியடைந்தது.

தத்துக் கிளிகள் பின்னங் கால்களை — நீண்ட மேல் இறகுகளின் மேலாக உரசியபடி ஒன்றோடொன்று தேய்த்துக் கொள்வதினால் ஒருவகை ஒலி எழுப்பும். பின்னங் கால்களின் ஆரம்பத்தில்— வயிற்றை ஒட்டியுள்ள இடத்தில் தத்துக்கிளிகளின் காதுகள் அமைந்துள்ளன.

வேறோர் இனத்தில் ஆண் வெட்டுக்கிளிதான் இறக்கைகளை ஒன்றோடொன்று தேய்த்துக் கொண்டு ஒலி எழுப்பக் கூடியவை. இவைகளுக்குக் காதுகள் இவற்றின் முதல் ஜோடிக் கால்களின் அமைந்துள்ளன. வெட்டுக் கிளிகளின் காதுகள் வினோதமானவை, விசித்திரமான இடங்களில் அமைந்திருந்தாலும் இவைகளால் ஒலியைக் கேட்க முடியும்.



இன்பவண்ணனிடம் அவன் இத்தனை நாள் எப்படி இருந்தான் என்பதை விளக்க விரும்பாத நிலையில் விடை பெற்றுக் கொண்ட கீர்த்தியிடம் அவன் ஒரு வேண்டுகோள் விடுத்தான்.

''அண்ணா ஒரு சின்ன வேண்டுகோள். பசிக்கு ஏதாவது கொண்டு வந்திருக்கிறாயா? என்னவோ தெரியவில்லை, எனக்கு ஒரே பசி! இப்படிப் பசித்து நான் பார்த்ததே இல்லை'' என்றான்.

உயர்பெற்று எழும் தம்பிகளுக்கு இப்படி அபாரமாகப் பசி எடுக்கும் என்பதை முன்கூட்டியே ' ஊகித்திருந்த கீர்த்தி அதற்காகவே உணவுடன் தயாராக வந்திருந்தானே. உணவுப் பொட்டலத்தை இன்பவண்ணனிடம் கொடுத்துக்கொண்டே, ''தம்பி இதோ இந்தக் கம்பளத்தின் மீது மட்டும் உட்கார்ந்து விடாதே'' என்று எச்சரித்தான். நளசர்மாவிற்கு ஏற்பட்ட அனுபவத்தைப் போல மறுபடி ஏற்பட்டு விடக் கூடாதே என்ற கவலை கீர்த்திக்கு.

இன்பவண்ணனை எச்சரித்து விட்டு மோகனரங்கனின் சாம்பலைத் தேடிக் கரடுமுரடான மலைகளில் தட்டுத் தடுமாறி ஏறினான் கீர்த்தி. ஒரு மலை இடுக்கில் ஒரு சாம்பல் குவியலும் அதன் அருகே இரும்புக்கவசமும் இருந்தன. அந்தக் கவசத்தின் அமைப்பிலிருந்து அது மோகனரங்கனுடையதுதான் என்பதைத் தெரிந்து கொண்ட கீர்த்தி அந்தச் சாம்பலில் ஜீவ நீர்த் துளிகளைத் தெளித்தான். அடுத்த விநாடியே மோகனரங்கன் முறுவலித்தபடி அந்தச் சாம்பல் குவியலிலிருந்து எழுந்து உட்கார்ந்தான்.

''என்ன தூங்குமூஞ்சிக் கவிராயரே! பலமான உறக்கம் போலிருக்கிறது? சரி, சரி, சீக்கிரமாக எழுந்து வா, இல்லாவிட்டால் நம் பசிக்கு ஏதும் கிடைக்காது. இன்பவண்ணன் எல்லாவற்றையும் உண்டு ஏப்பம் விட்டுவிடுவான்'' என்று கூறி அவனையும் அழைத்துக் கொண்டு இன்பவண்ணன் இருக்குமிடம் வந்தான் கீர்த்தி. நல்லவேளை, இன்னும் கொஞ்சம் தாமதமாக வந்திருந்தால் கீர்த்தி கூறியபடி அவர்களுக்கு ஏதுமே இருந்திருக்காது!

மந்திரக் கம்பளம் (17)

வாண்டுமாமா

மூவரும் உண்டு பசியாறிய பிறகு தான், கீர்த்தி அக்கினி அரக்கனுடன் தான் போரிட்டு அதை அழித்ததைக் கூறினான். ஆனால் தம்பிகள் இருவரும் சாம்பலாகி மறுபடி புத்துயிர் பெற்றதை மட்டும் கீர்த்தி அவர்களுக்குக் கூறவில்லை. கீர்த்தி புத்திசாலியாயிற்றே. அவர்கள் நம்பும்படியாக ஒரு கதை கட்டி விட்டான்.

''தம்பிகளா, இந்த அக்கினி அரக்கன் வசிக்கும் பிராந்தியம் இருக்கிறதே அது மந்திர சக்தியினால் காக்கப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டது. இதற்குள் நுழைபவர்கள் நினைவிழந்து அப்படியே நீண்ட உறக்கத்தில் ஆழ்ந்து விடுவார்கள். அதனால்தான் அதை வெற்றி கொள்ள விரும்பும் யாரும் வெற்றியோடு திரும்புவதில்லை. நீங்களும்கூட அந்த மந்திரத்தினால் மயங்கித்தான் உறங்கிப் போனீர்கள். இந்த ரகசியத்தையறிந்த நான் முதலில் உறக்கத்துக்கு உட்படுத்தும் அந்த மந்திரக் கட்டிலிருந்து விடுபடுவதற்கு வழி செய்து கொண்டேன். அதன் பிறகு அக்கினி அரக்கனையும் பனி அரக்கனையும் மோதவிட்டு இரண்டையும் அழிப்பது சுலபமாயிற்று.'' என்றான். இப்படிக் கீர்த்தி அவர்கள் செத்துப் பிழைத்ததைக் கூறாமல், உறங்கி எழுந்திருந்திருப்பதாக நம்பும்படிச் செய்து விட்டான். மற்றும் மந்திரக் கம்பளத்தைப் பற்றியும் அவர்களிடம் விவரித்தான். ஆனால் அதைக் கேட்டு அவர்கள் வியப்படையவில்லை. அவர்கள் தான் மந்திர தந்திரங்களில் எல்லாம் நம்பிக்கையுள்ளவர்கள் ஆயிற்றே!

''இப்போது நாம் மந்திரக் கம்பளத்தில் உட்கார்ந்து ஆகாய வீதியில் பறந்து செல்லப் போகிறோம். பனி அரக்கனின் இடத்தை நீங்கள் பார்க்க வேண்டாமா? அதுவும் தவிர அங்கு ஏராளமான வீரர்கள் பனி அரக்கனின் கொடிய சீதளத்தினால் உறைந்து சிலையாக இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் உயிர்ப்பித்துவிடவேண்டும்' என்றான் கீர்த்தி.




''மந்திரக் கம்பளத்தைக் கொண்டு வந்திருக்கிறாயா? எங்கே?'' என்று கேட்டான் இன்பவண்ணன்.

''நீ சொகுசாகச் சாய்ந்து கொண்டு உட்கார்ந்திருக்கிறாயே, அதுதான் மந்திரக் கம்பளம்'' என்று கூறி அதை எடுத்து விரித்தான். மூவரும் அதில் ஏறி அமர்ந்து கொண்டார்கள். கீர்த்தி கம்பளத்துக்குக் கட்டளையிட அது 'ஜிவ்' வென்று ஆகாயத்திலே எழும்பிப் பறந்து பனி அரக்கன் உருகி நதியாக ஓடிக் கொண்டிருக்கும் பகுதிக்குப் போய் இறங்கிற்று. கீர்த்தியின் தம்பிகள் பிரமிப்பினால் திக்குமுக்காடிப் போயிருந்தார்கள். அது மந்திரக் கம்பளத்தில் பிரயாணம் செய்ததினால் மட்டுமல்ல. அந்தப் பிரதேசத்திலே வரிசை வரிசையாக ஏராளமான போர் வீரர்கள் பல்வேறு நாட்டு உடைகளில் குதிரைமீதும் தேர்களிலும் சிலைகளாகி நிற்கும் காட்சியும் அவர்களை அப்படி ஆக்கியிருந்தது.

கீர்த்தி அங்கிருந்த ஒரு செடியின் பெரிய இலைகளைப் பறித்துத் தொன்னை போலச் செய்து அதில் கொஞ்சம் ஜீவ நீரை ஊற்றித் தம்பிகளிடம் கொடுத்து ''இதிலிருந்து ஒவ்வொரு துளி எடுத்து இங்குள்ள சிலைகளின் மீது தெளியுங்கள்'' என்று கூறினான். தானும் தன்னிடமுள்ள குடுவையிலிருந்து அந்த மந்திர நீரைக் கொண்டு சிலைகளை உயிர்ப்பிக்கலானான்.

கொஞ்ச நேரத்தில் சலனமற்று நிசப்தமாக இருந்த அந்தப் பிராந்தியத்திலே கோலாகலமான கூச்சல் எழுந்தது. சிலைகளாக உறைந்துபோய் இருந்த அத்தனை வீரர்களும் உயிர் பெற்று விட்டார்கள். குதிரைகள் கனைத்தன. வாள்கள் மின்னின. கவசங்களும் கேடயமும் கலகலத்தன. அப்போதுதான் வந்து கூடியவர்களைப் போல அத்தனை போர் வீரர்களும் தங்கள் தங்கள் மொழிகளில் உற்சாக



ஆரவார கோஷமிட்டார்கள். உலகத்து மொழிகள் அத்தனையையும் அறிந்த கீர்த்தி அவர்கள் எல்லோருடனும் அளவளாவினான். அவர்களை வரிசைப் படுத்தி விசித்திரபுரிக்குத் தன் விருந்தாளிகளாக வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டான்.


''வாழ்க வாழ்க... இளவரசர் கீர்த்தி வர்மர் வாழ்க!''

''பனி அரக்கனை மாய்த்த பராக்கிரமர் கீர்த்தி வர்மர் வாழ்க...!''

''அக்கினி அரக்கனை அழித்த அற்புத வீரர் கீர்த்தி வர்மர் வாழ்க வாழ்க!'' என்ற கோஷம் வானை முட்ட புழுதிப் படலம் விசித்திரபுரியை எட்டியது. அத்தனை வீரர்களும் அணிவகுத்து ஆர்ப்பாட்டமிட்டபடி விசித்திரபுரியை நோக்கி வீறு நடை போட்டார்கள். வெள்ளமென வரும் வீரர்களையும் அவர்கள் போடும் கோஷங்களையும் கேட்ட மந்தஹாசரின் மனத்திலே மகிழ்ச்சி பொங்கிற்று. கீர்த்தியின் மீதிருந்த கோபமெல்லாம் அக்கினி அரக்கனின் பிடியில் பனி அரக்கனின் உடல் உருகியது போல ஓடி மறைந்தது.

இளவரசர்கள் மூன்று பேரும் வந்து கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தியைக் கேட்டு இன்பவண்ணனும் மோரகனரங்கனும் உயிர் பெற்று விட்டார்கள் என்பதை உணர்ந்து கொண்டார் மந்தஹாசர். அவர் உள்ளம் தீவிரமான சிந்தனையில் ஆழ்ந்தது.

மந்திரக் கம்பளத்தில் ஏறிக் ககன மார்க்கமாக இளவரசர்கள் மூவரும் மங்களகிரிக்கு வந்தார்கள். மூன்று இளவரசர்களையும் ஒரே சமயத்தில் கண்ட மாணிக்க வர்மர் திகைப்பினாலும் பரபரப்பினாலும் தவிதவித்துப் போனார். கீர்த்தி அவரிடம் நடந்தவைகளைச் சுருக்கமாக விளக்கினான். மகிழ்ச்சியால் மலர்ந்த முகத்துடன் அத்தனையையும்



கேட்டுக் கொண்டிருந்தாள் குந்தளவல்லி.

''இங்கு தாமதிப்பதற்கில்லை. நீங்களும் குந்தளவல்லியும் எங்களோடு விசித்திரபுரிக்கு வருகிறீர்கள்; கம்பளத்தில் வந்து அமர்ந்து கொள்ளுங்கள்'' என்றான் கீர்த்தி. அவன் விருப்பப்படியே அவர்கள் இருவரும் மந்திரக் கம்பளத்தில் வந்து அமர்ந்துகொண்டார்கள். குந்தளவல்லி கீர்த்தியின் அருகில் அவன் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

மந்திரக் கம்பளத்தில் வந்து இறங்கிய இளவரசர்களை அங்கு கூடி இருந்த பலதேசத்து ராஜ குமாரர்களும் வீரர்களும் உற்சாகமாக ஆரவாரமிட்டு வரவேற்றார்கள். மந்தஹாசர் இன்ப வண்ணனையும், மோகனரங்கனையும் இரு கைகளாலும் தம் உடலோடு அணைத்துக்கொண்டு கண்ணீர் விட்டார். இன்பனுக்கும் மோகனுக்கும் தகப்பனார் விக்கி விக்கி ஏன் அழவேண்டும் என்றே மஞ்சுளாவும் கனகாவும் விசித்து விசித்து அழுவதற்கான காரணம் என்ன என்றே புரியவேயில்லை! ஆனால் கொஞ்ச நேரத்தில் எல்லாரும் கலகலவென்று மகிழ்ச்சியினால் சிரிக்கலாயினர்.

மூத்த மகன் கீர்த்தியை மார் போட அணைத்துத் தழுவிக் கொண்டார். மந்தஹாஸர். ''என்னை மன்னித்து இந்த நாட்டின் அரசப் பொறுப்பை ஏற்றுக் கொள்'' என்றார். ''என் மகன் வீராதி வீரன் கீர்த்தி வர்மனுக்கு...'' என்று தானே குரல் எடுத்துக் கூவினார். ''ஜே! ஜே!'' என்ற கோஷம் அரண்மனையை அதிர வைத்தது.

குந்தளவல்லியைத் தன் வாழ்க்கைத் துணைவியாக ஏற்கப் போவதாகவும் அதற்கு ஆசியும் அனுமதியும் வேண்டித் தகப்பனாரை வணங்கினான் கீர்த்தி. குந்தளவல்லியின் எழிலிலே மந்தஹாசர் மகிழ்ந்துபோனார்.

''நாளைக்கே மூன்று மணவறைகள் தயாராகட்டும். நாள் நட்சத்திரம் சம்பிரதாயச் சடங்குகள் எல்லாம் வேண்டாம். மூன்று ராஜகுமாரர்களுக்கும் நாளைக்கே திருமணம். தகுந்த ஏற்பாடுகளைச் செய்யுங்கள். விருந்துமட்டும் பிரமாதமாக இருக்க வேண்டும்'' என்று தம் மந்திரிக்கு ஆணையிட்டார் மன்னர் மந்தஹாசர்.

மறுநாள் கீர்த்தியின் கரத்தைக் குந்தளவல்லியும், இன்ப வண்ணனின் கையை மஞ்சுளாவும், மோகனரங்னின் அருகிலே கனகாவுமாகத் திருமணம் முடிந்து ஆலய தரிசனத்துக்குப் போய்க் கொண்டிருந்தார்கள் ஊர்வலமாக. அப்போது வெகுவேகமாக ஆறு குதிரைகள் பூட்டிய ரதமொன்று ராஜ வீதியிலே புழுதியைக் கிளப்பியபடி வந்தது. அதிலிருந்தது யார் என்று நினைக்கிறீர்கள்? மகாராணி ரத்னவதி தான்! சாலை மார்க்கமாக மங்களகிரியிலிருந்து கிளம்பியவள் அன்று தான் விசித்திரபுரிக்கு வந்து கொண்டிருந்தாள்.

ஊர்வலத்தைக் குறுக்கிட்ட ரதம் நிறுத்தப்பட்டது. அதிலிருந்து இறங்கிய ராணி ரத்னவதி தம் இளைய பிள்ளைகள் இருவரையும் உயிரோடு கண்டதும் மகிழ்ந்து போனாள்.

''அசட்டுப் பயல்களா, இத்தனை நாள் எங்கே ஒளிந்து கொண்டிருந்தீர்கள்? உங்கள் அப்பா ஏதேதோ கற்பனை யெல்லாம் பண்ணி விட்டார்.'' என்றாள்.

குந்தளவல்லியுடன் கீர்த்தி எங்கு போனான் தெரியுமா? அந்தப் பாழடைந்த அரண்மனைக்குத்தான்! இப்போது அது அத்தனை மோசமாக இல்லை. மன்னருக்கும் இளவரசனுக்கும் சமரசம் ஏற்பட்டு விட்டதனால் கீர்த்தியை விரும்பும் குடிபடைகளும் அரண்மனை நிர்வாகிகளும் அங்கு திரும்பியிருந்தார்கள். அங்கு கலகலப்புக் கூடிக் கொண்டிருந்தது. வருங்கால மன்னர் இனி கீர்த்தி வர்மன்தானே? இறந்து இளமையோடு உயிர்பெற்ற பூனைக்குட்டி தன் வாலை நிமிர்த்தி உயர்த்திக் கீர்த்தியை வரவேற்றது. அவன் காலோடு தன் உடலை உரசிக் குலவிற்று. அந்த அரண்மனையே தனக்குச் சொந்தமானது போல, கீர்த்தி குந்தளவல்லி இருவருக்கும் வழிகாட்டிக் கொண்டு முன்னால் நடந்தது அந்தப் பூனை.

குந்தளாவும் கீர்த்தியும் மகிழ மரத்தடியில் அமர்ந்திருந்தனர். கீர்த்தி கேட்டான்: ''குந்தளா, உனக்கு மகிழ்ச்சிதானே?''

''மகிழ்ச்சிதான்...'' என்றாள் குந்தளவல்லி. ஆனால் அவள் அப்படிச் சொன்னபோது அவள் குரலில் ஏதோ ஒரு குறை இருப்பதாகப் பட்டது கீர்த்திக்கு.

''இல்லை, உன் குரலில் ஏதோ ஒரு ஏக்கம் இழையோடுகிறது. பூரணமான மகிழ்ச்சியாக அது ஒலிக்கவில்லையே குந்தளா, கண்ணே உன் மனத்தைத் திறந்து எனனிடம் உண்மையைச் சொல்லு.''


குந்தளா கீர்த்தியின் அகன்ற மார்பில் தன் முகத்தைப் பதித்தபடி ''என்னைப் போலவே எல்லோரும் உங்களை **விரும்பி** நேசிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். நீங்கள் அரசர் என்ற பயத்தினாலும் மதிப்பினாலும் மட்டும் இல்லாமல் ஒவ்வொருவரும் உங்களை உண்மையாகவே **விரும்ப** வேண்டும். நீங்கள் எல்லோரையும் விட மிக மிக அறிவாளியாக, சாமர்த்தியக்காரராக இருப்பதில் எல்லோருக்கும் இப்போது உங்களிடம் பயம்தான் இருக்கிறது. ஆகவே நினைத்ததைக் கொடுக்கும் மந்திரக் குல்லாயை அணிந்து கொண்டு 'எல்லோரையும் போலவே சாதாரண அறிவாளியாகவும் சராசரியான சாமர்த்தியக்காரராகவும் நான் மாற வேண்டும்' என்று நினைத்துக் கொள்ளுங்கள். உங்கள் விருப்பத்தை அந்த மந்திரக் குல்லாய் நிறைவேற்றி வைக்கும். அதன் பிறகு எல்லோருமே உங்களிடம் பயம் கொள்ளுவதை விட்டு **உண்மையான அன்போடு** நேசிப்பார்கள்'' என்றாள் குந்தளவல்லி.

கீர்த்தி சில விநாடிகள் மௌனமாக இருந்தான். பிறகு ''குந்தளா, உன் விருப்பம்தான் இனி எனக்கு வாழ்க்கை நியதி. இப்படி நீ விரும்பினையானால் அப்படியே ஆகட்டும். கொஞ்சம் பொறு. இதோ என்னை மாற்றிக் கொண்டு வருகிறேன். இங்கேயே இரு'' என்று கூறியபடி வடக்குக் கோட்டை வாசல் உப்பரிகையில் உள்ள உச்சாணி அறையை நோக்கி ஓடினான் கீர்த்தி வர்மன்.

நினைத்ததை நினைத்தபடி நிறைவேற்றும் குல்லாயை எடுத்து அணிந்து கொண்ட கீர்த்தி தனக்குத் தானே கூறிக் கொண்டான். ''குந்தளா விரும்பியபடி நான் மாறப் போவதில்லை. ஒவ்வொரு மனிதனுக்கும் தன் மனைவிக்குத் தெரியாத ஒரு ரகசியம் இருக்கும். அந்த ரகசியம் எனக்கு இதுவாக இருக்கட்டும்'' என்றவன் குல்லாயிடம் கூறினான்: ''மற்றவர்களைவிட அதிகமான அறிவாளியாகவோ, சாமர்த்தியக்காரனாகவோ பிறருக்கு நான் **தோன்றக் கூடாது.** ஆனால் அதே நேரத்தில் அதனால் என் நிலையில் எவ்வித மாற்றமும் ஏற்படக் கூடாது'' அவன் விரும்பியபடியே பிறர் மனத்தில் அவனைப் பற்றி இருந்த பழைய எண்ணமும் பயமும் மறைந்தன.


கீர்த்தி மந்திரப் பொருள்கள் நிறைந்த அறையிலிருந்து திரும்பிக் குந்தளவல்லியிடம் வந்தபோது தன் கணவனிடம் மகத்தான மாறுதல் ஏற்பட்டிருப்பதாக எண்ணினாள் அவள். குந்தளவல்லியைப் போலவே அந்த விநாடியிலிருந்து எல்லோருமே கீர்த்தியைப் பற்றி நினைக்கலானார்கள். ஆனால் கீர்த்தி எப்போதும் போல எல்லோரையும் விட அதி சாமர்த்தியசாலியாகவும் வீரனாகவும் விளங்கினான். ஆனால் முன்போல மற்றவர்களுக்கு அவனுடைய சிறப்புக்கள் எடுப்பாக மனத்தில் படவில்லை. நினைத்ததைக் கொடுக்கும் மந்திரக் குல்லாயின் மகிமை அது!

விசித்திரபுரியை ஆண்ட அரசர்களிலேயே மக்களால் மிகவும் விரும்பி நேசிக்கப்பட்ட ஒரு மகாராஜாவாகக் கீர்த்தி வர்மன் விளங்கினான்.



முற்றும்

மணங்கவரும் யாவற்றையும் என்றும் மன மகிழ படம் பிடித்து வைப்பீர்!



ஆக்:.பா ஐஸோலி குறைவான ஒளியிலும் நிறைவான போட்டோக்களுக்கு.

விலை
Rs.182/50
(எக்ஸைஸ் தீர்வை உள்ளிட்டது. இதர வரிகள் தனி).



ஆக்பா ஐஸோலி 1 அமெச்சூர் புகைப்படக் கலைஞர்களுக்குப் புதிய வாய்ப்புக்களை அளித்திடும் காமெராவாக இது விளங்க 6 காரணங்களாவன :

1. மூன்று ஷட்டர் வேகப் பொருத்தங்களுடன் விரைவாக இயக்குவது இலகு.
2. நுட்பத் தெளிவுடன் சோபிக்கும் படங்களுக்கான அக்ரோமாட் F8 லென்ஸ்.
3. பாதகமான சூழ்நிலைகளிலே எடுக்கப்படும் படங்களின் சரியான எக்ஸ்போஷருக்கு உறுதி தரும் 2 லென்ஸ் ஸ்டாப்கள்.
4. விசேஷ லாகிங் பொறியமைப்பை உடைய பிலிம் சுருட்டுக் குமிழ் இரட்டை எக்ஸ்போஷரைத் தடுத்திடுகிறது.
5. 120 சைஸ் ரோல்பிலிமிலே 16 (4x4 செமீ) படங்களைத் தருகிறது (6x6 செமீ சைஸ் படைப்பதைவிட 4 அதிகம்!).

திரையிடுவதற்கேற்ப பளிச்சென்ற ஆக்பா கலர் டிரான்ஸ்பேரென்ஸிகளையும் எடுக்கிறது ஆக்பா ஐஸோலி I. தெள்ளத் தெளிவான பிரிண்டுகளுக்கும், என்லார்ஜ்மெண்டுகளுக்கும் எப்போதுமே குறிப்பிட்டுக் கோருவீர் ஆக்பா-கேவார்ட் போட்டோத் தாள்களை.

தயாரிப்பாளர்கள்:
நியூ இந்தியா இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்., பரோடா.

ISOLY-I

AGFA

ஏகபோக விநியோகஸ்தர்கள் :
ஆக்பா-கேவார்ட் இந்தியா லிமிடெட்.,
மர்ச்சண்ட் சேம்பர்ஸ், 41, நியூ மெரின்லைன்ஸ், பம்பாய்-400 020.
கிளை அலுவலகம்: பம்பாய் · புது டெல்லி · கல்கத்தா · சென்னை
® புகைப்பட சாதனங்களின் தயாரிப்பாளர்களான ஆக்பா-கேவார்ட் ஆண்ட்வெர்ப்/லிவர்குஸன் அவர்களின் ரெஜிஸ்டர்டு ட்ரேட் மார்க்.

SIMOES/AG/33TAM

தெரியுமா ?

1508. பாரத மாகாணங்களுக் கிடையே-இண்டர் ஸ்டேட் அதெல்டிக் சாம்பியன்ஷிப் — போட்டிகள் நடை பெற்றது எந்த ஆண்டில்? எந்த மாகா ணம் வெற்றி பெற்றது? எங்கே?

1509. உலகிலேயே மிக நீண்ட கவி தைக் காவியம் எது தெரியுமா?

1510. ஷேக்ஸ்பியர் நாடகங்களில் ஷைலக் என்ற பாத்திரம் எந்த நாட கத்தில் வருகிறது?

1511. காளிதாஸர் எழுதிய நான்கு இலக்கியங்களைக் கூற முடியுமா?

1512. 'டிஸ்கவரி ஆஃப் இந்தியா' என்ற புகழ் மிக்க புத்தகத்தை எழுதி யவர் யார்?

1513. கீதாஞ்சலியை எழுதியவர்; யார்?

1514. கிரேக்க இதிகாசங்களான இலியத், ஒடெஸி ஆகியவைகளை எழு தியது யார்?

1515. ஊர்வசிப் பட்டத்தை 1971ல் பெற்ற நடிகை யார்?

1516. சாடலேட்டுகளை முதன் முத லில் அனுப்பிய ஆசிய நாடு எது?

1517. ஜனாதிபதி ஜாகிர் ஹுசைன் மறைவுக்குப் பிறகு அடுத்த ஜனாதிபதி பதவி ஏற்குமுன் அந்த இடைக்காலத் தில் ஜனாதிபதி பொறுப்பை பாரதத்தின் ஒரு பிரதம நீதிபதி (Chief Justice) வகித்தார். அவர் பெயர் தெரியுமா ?

1518. உலகஅழகியாக (Miss World) ஓர் இந்தியர் தேர்ந்தெடுக்கப்பட்டார். எந்த ஆண்டு, என்ன பெயர்?

1519. உலகின் மிகப் பெரிய பொருட்காட்சி சாலை (மியூஸியம்) எது?

1520. உலகின் மிகப் பழைமையான மியூஸியம் எது?

1521. சோவியத் நாட்டில் மக்க ளால் பேசப்படும் மொழிகள் எத்தனை என்று தெரியுமா ?

1522. சோவியத் நாட்டில் ஆண்டு தோறும் வெளியாகும் புத்தகங்கள் எவ்வளவு? மொத்தப் பிரதிகள் எத் தனை என்று கூற முடியுமா ?

1523. சூடானின் தலைநகரம் எது?

1524. கார்டோம் என்ற நகரம் எங்கு உள்ளது ?

1525. இந்தியாவையும் இலங்கை யையும் பிரிக்கும் நீர்ப் பகுதிக்குப் பெயர் என்ன?

1526. இந்தியாவின் எந்தப் பகுதி வருடத்தில் மிக அதிகமான மழையைப் பெறுகிறது ?

1527. உலகின் மிக ஆழமான பள்ளம் எது, எங்கே இருக்கிறது?

1528. உலகின் மிகப் பெரிய பாலைவனம் எது ?

1529. ஆசியா மைனருக்கும் தென் ரஷ்யாவுக்கும் இடைப்பட்ட உள் நாட்டுக் கடலின் பெயர் என்ன?

1530. புதுதில்லியை நிர்மாணித்த ஆங்கிலேயக் கட்டட நிபுணர்—முக்கிய மாக இந்தியா கேட், வைசிராய் ஹவுஸ் இவைகளைக் கட்டியவரின் பெயர் தெரியுமா ?

1531. பார்ஸிகளின் புனித வேத புத்தகத்தின் பெயர் என்ன?

1532. புத்தர்பிரான் 2500 ஆண்டு களுக்கு முன்பு தன்னுடைய தத்துவங் களை ஒரு வனத்திலிருந்தபடி போதித் தார். அங்கு ஏராளமான மான்கள் உண்டு. அந்த இடம் இப்போது எங்கு உள்ளது ?

1533. இந்தியாவில் கிறிஸ்து மதத்தை கி. பி. 50 வாக்கில் பரப்பி யது யார் என்று நம்பப்படுகிறது?

1534. மார்டின் லூதர் கிங் என்ற நீக்ரோத் தலைவர் கொல்லப்பட்டது எப்போது ?


தெரியுமே!

விடைகள்: 1508. 1972ல் கோட்டயத்தில். வெற்றி பெற்ற மாகாணம் பீஹார். 1509. மஹாபாரதம். 30,00000 வார்த்தைகளைக் கொண்டது. 1510. வெனிஸ் நகர வர்த்தகன் நாடகத்தில். 1511. மேகதூதம், சாகுந்தலம், ரகு வம்சம், குமார சம்பவம். 1512. ஜவஹர்லால் நேரு. 1513. ரவீந்திரநாத் டாகுர். 1514. ஹோமர். 1515. ரெஹனா சுல்தான் - தாஸ்தக் என்ற படத்தில் நடித்ததற்காக 1516. ஜப்பான் - 1970ல் பிப்ரவரி 11ல் அனுப்பியது. 1517. பிரதம நீதிபதி இதாயதுல்லா. 1518. மிஸ் ரீடா ஃபோரியா 1969ல். 1519. நியூயார்க்கிலுள்ள - அமெரிக்கன் மியூசியம் ஆஃப் நேச்சுரல் ஹிஸ்டரி. 1874ல் நிறுவப் பட்டது இது. 1520. ஆஷ்மொலியன் மியூசியம் - ஆக்ஸ் போர்டில் உள்ளது. 1679ல் நிறுவியது. 1521. எண் பத்தி ஒன்பது (89) மொழிகள் வழங்கிலுள்ளன. 1522. வெளியாகும் புத்தகங்கள் 85,000 தலைப்புக் களில். பிரதிகளின் எண்ணிக்கை 150 கோடி. 1523. கார்டோம் (Khartoum) 1524. சூடானின் தலை நகரான இது வெள்ளை, நீல நைல் நதிகளின் சந்திப் பில் இருக்கிறது. 1525. பாக் ஜலசந்தி. 1526. அஸ்ஸாமிலுள்ள மான்சிராம் என்ற இடம். 1527. இஸ்ரேல், ஜோர்டானிலுள்ள செத்த கடல் (Dead Sea) கடல் மட்டத்துக்குக் கீழே 1286 அடிகள் உள் ளது இக்கடல் - பள்ளம்! 1528. சஹாரா. உலகின் மொத்த நிலப்பரப்பில் எட்டில் ஒரு பாகம் இது. 1529. கருங்கடல். 1530. சர் எட்வின் லுட்யன்ஸ் என் பவர். 1531. ஜென்ட் அவெஸ்தா (Zend Avesta) 1532. காசிக்கு அருகிலுள்ள ஸாரநாத் என்னு மிடத்தில். 1533. புனித தாமஸ் அவர்கள். 1534. ஏப்ரல் 5, 1968.

மூளைக்கு வேலை




எந்தக் குஞ்சு எந்த முட்டையிலிருந்து வெளி வந்திருக்கிறது?




இங்குள்ள கோலங்களில் எந்த இரண்டு ஒரே மாதிரியானவை என்று சட்டென்று சொல்ல முடியுமா?

(விடை: 2-ம், 5-ம்)



இங்குள்ள பித்தான்களில் கருப்புப் பித்தான்கள் எவ்வளவு, வெள்ளைப் பித்தான்கள் எவ்வளவு, கருப்பும் வெள்ளையும் கலந்தவை எத்தனை?

(விடை: கருப்பு 10, கருப்பும் வெள்ளையும் 24, வெள்ளை 11).



இங்குள்ள படத்தில் மொத்தம் எத்தனை வட்டங்கள் இருக்கின்றன என்று கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்.

(விடை: முப்பது)

'கோகுலத்'தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக வி. வைத்தியநாதன் அச்சிட்டு வி. முரளியால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர்: கே. ஆர். ஆத்மநாதன்

உங்களுடைய பார்சல்கள் எங்களுடைய வாழ்வு.



எனவேதான் உங்கள் பார்சல்களைப் பத்திரமாகவும், குறித்த நேரத்திலும், ஒழுங்காகவும் கொண்டு சேர்க்கிறோம்.

எப்படி என்று கேட்கிறீர்களா?

வேகமாக: ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்துக்கு நேரிடையாகச் செல்லும் பார்சல் சர்விஸ் இருப்பதனால் உங்கள் பார்சல்கள் வழியில் ஏற்றி இறக்கப்படுவதில்லை. மேலும் எங்கள் லாரிகள் அனைத்தும் எங்களுக்குச் சொந்தமானவை. எனவே காத்திருக்கத் தேவையில்லை. டிரெய்லர்களும் நிறைய இருப்பதால், அதிக பார்சல்களை விரைவில் ஏற்றிச் செல்ல முடியும். இவை தவிர, மின்னல்வேக சர்விஸ்களும் உண்டு. வண்டிகள் நடுவழியில் பழுதடைந்தால், உடனடியாகச் செப்பனிட பட்டறைகளையும் நிறுவியிருக்கிறோம்.

பத்திரமாக: எங்கள் டிரைவர்கள் அனைவரும் திறமைசாலிகள். அவர்களை அவ்வப்போது சோதனைகளுக்கும் உட்படுத்துகிறோம். அபாயம் இருக்கக் கூடிய நள்ளிரவு நேரங்களில் வண்டி ஓட்ட அனுமதிப்பதில்லை. மேலும் எங்களது ஏற்றி-இறக்கும் பணியாட்கள் அனுபவம் மிகுந்தவர்கள். உங்கள் பார்சல்களை பூப்போல கையாளக் கூடியவர்கள். எனவே பார்சல்கள் பத்திரமாகப் போய்ச் சேர்கின்றன.

ஒழுங்காக: எங்கள் ஊழியர்கள் நன்கு பயிற்சி பெற்றவர்கள். அனுபவசாலிகள். திறமையுடன் பணியாற்றுவதையே லட்சியமாகக் கொண்டவர்கள். இன்முகமும், புன் சிரிப்பும், இணையற்ற செயல் திறனும் இணைந்தவர்கள்.

இப்படித்தான் 60 ஆண்டு காலமாக உங்களுக்குத் தொண்டாற்றி வருகிறோம். இனியும் தொடர்ந்து பணி புரிவோம்.

TVS உங்கள் நம்பிக்கைக்கு உரியது டிவிஎஸ்

ஸதர்ன் ரோட்வேஸ்
பிரைவேட் லிமிடெட், மதுரை
(டிவிஎஸ் தொகுப்பைச் சேர்ந்த நிறுவனங்களில் ஒன்று)



FDS SR 2008 TAMA

REGISTERED NO. M. 9040

GOKULAM, Children's Fortnightly



